Registered as a news paper. பக்கங்கள்: பதின்னான்கு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

மகாராசி சில்க்ஸ்

சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்


மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P No - 0777286247

(c-2203)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 25 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 26 (10.11.2004) புதன்கிழமை இதழ்:41



கிளிநொச்சி வந்த பாலா, தளபதிகள், பொறுப்பாளர்கள்.



வரவேற்று அழைத்துவரப்படும் அன்ரன்பாலசிங்கம்

# கிளிநொச்சிக்கு வந்த பாலசிங்கம்

# பிரபாவுடன் முக்கிய ஆலோசனை

(கிளிநொச்சி)

லண்டனிலிருந்து நேற்றுக்காலை கிளிநொச்சியை வந்தடைந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்த மந்திராலோசனையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் தங்கியிருந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அடேல் பாலசிங்கம் ஆகியோர் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடனான முக்கிய கலந்துரையாடல் மற்றும் நாளை கிளிநொச்சியில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுடனான சந்திப்புக்களில் கலந்துகொள்வதற்காக நேற்று தாயகம் திரும்பினர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதிகள் விமானப் படையின் ஹெலிகொப்ரர் மூலமாக நேற்று காலை 10.15 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

கிளிநொச்சி பொது விளையாட்டரங்கில் வந்திறங்கிய இவர்களை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவற்துறைப் பொறுப்பாள பா.நடேசன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளராக ரணிலை நிறுத்தும் ஐ.தே.க!

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை அந்தக் கட்சி தெரிவு செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறகோத்தாவில் நேற்று இடம்பெற்ற அந்தக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை அந்தக் கட்சியின் பிரதித் தலைவரான கரு ஜெயசூரியா முன்மொழிந்தார்.

கட்சியின் 50 ஆவது மாநாடு அடுத்த மாதம் நடைபெறும் போது ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் வழிமொழியப்படும்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள கட்சியின் மாநாட்டில் அரசியலமைப்பு மாற்றம் ஜனாதிபதி ஆட்சிமுறை மற்றும் தேர்தல் ஆணைக்குழு தொடர்பாகவும் கலந்துரையாடப்படும்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான சர்ச்சை காரணமாகவே அவசர அவசரமாக ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளிருந்து வேறொருவரை வேட்பாளராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அத்துடன் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ரணிலின் வெற்றி தொடர்பில் நம்பிக்கை இழந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையிலேயே ரணில் தனது ஆதரவாளர்களிடம் தன்னைத் தெரிவு செய்யுமாறு கூறியதாகவும் அந்தத் தகவல் தெரிவித்தது. எவ்வாறாயினும் ரணிலுக்கு எதிராக வேறொருவர் ஜனாதிபதி வேட்பாள

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் நேற்றுப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பிரபா (வயது 19) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை 6 மணியளவில், வீதியில் சென்றுகொண்டிருந்த இந்த இளைஞர் அறுந்து வீழ்ந்துள்ள மின்சாரக் கம்பியில் சிக்கியே உயிரிழந்தார்.

இதையடுத்து நேற்றுக்காலை 11 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்ட பொலிஸார் உடனடியாக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

உயிரிழந்த இளைஞரின் சட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு - முஸ்லிம் காங்கிரசுடன் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சியின் ஒரு கட்டமாக நேற்று அதிகாலை கொழும்பு வந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடல் நடத்தினார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி சொல் பிரித் - லியன் ஆகியோரும் இந்தச் சந்திப்புகளில் கலந்துகொண்டனர்.

நோர்வே தூதராலயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்ற சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில்,

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், சுரேஸ்பிரேமச்சந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தகவல் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதில் மேலும் தாமதங்கள் தொடருமானால் நிலமை மோசமடையும் என்பதை இந்தச் சந்திப்பின்போது எரிக் சொல்ஹெய்மிடம் நாம் எடுத்துக் கூறியுள்ளோம்.

ஜனாதிபதியிடமோ, அரசாங்கத்திடமோ சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது தொடர்பான அர்ப்பணிப்பு இல்லை. தங்களுடைய பதவியை எப்படி பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதில் தான் அவர்கள் ஆர்வம் காட்டுகின்றார்கள். இதன் காரணமாக தமிழ் மக்கள் ஜனாதிபதியின் மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இழந்து வருகின்றார்கள் என்பதை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம். (14 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிளில் சென்ற இளைஞர் களுவங்கேணியில் சுடப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுவங்கேணியில் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்ட இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோபாலன் புவிதரன் (வயது 26) என்ற இளைஞரே காயமடைந்ததாகத் தெரியவருகிறது.


தனது வீட்டிலிருந்து சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவரை விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு அருகில் எதிர்கொண்ட இரண்டு இனந்தெரியாத நபர்களே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரியவருகிறது.



துப்பாக்கிப் பிரயோகம் மேற்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# நமது ஈழநாடு நடத்திய க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளிலிருந்து சில காட்சிகள்....








# குடாநாட்டு கல்வி அபிவிருத்தி குறித்து வலய மட்டத்தில் கலந்துரையாடல்!

## நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அழைப்பு

யாழ்.மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக கல்வித் திணைகள அதிகாரிகளுடன் ஆராயும் உயர் மட்டக் கலந்துரையாடல் நாளை மறுதினம் முதல் வலய ரீதியாக நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் - யாழ். மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி, பாடசாலைகளின் பௌதீகத் தேவைகள், இயல்பான கற்றலுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படவுள்ளன. அத்துடன் பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அன்றையதினம் மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் வடமராட்சி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கும்,

மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இராமநாதன் மகளிர் கல்லூரியில் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் , அன்றைய தினம் மாலை 3 மணிக்கு வரணி மகாவித்தியாலத்தில் தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கும்,

திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் தீவக வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல்களில் வலயக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் - தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## முக்கிய அறிவித்தல்

**மாகாண சுகாதார சேவைகள்**

**பிரதிப் பணிப்பாளர் பணிமனை– கிளிநொச்சி**

**பால் தவிர்ந்த சமைத்த உணவு/உலர் உணவு/அழுக்குத் துணிகள் கழுவுதல் – 2005 – கேள்வி திறத்தல் – பிற்போடல்**

22.10.2004 ந் திகதி விளம்பரம் செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட கேள்விகள் 2004.11.10 ந் திகதி இன்று திறக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருவதுடன், இக்கேள்விகள் 2004.11.15 ந் திகதியன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி,
மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(C/3337)

**நாதன்ஸ்**

**கேம்பஸ்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30 (பு.நே)

SPIDERMAN-I இரவுக் காட்சி: 8.30 (பு.நே)

விரைவில் **டீரீம்ஸ்**

(சி-3319)

# சேவைநயப்பு விழா!

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபராக இருந்து தெல்லிப்பளைக் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்லும் ச. கைலாசநாதனுக்கு சேவை நயப்பு விழா இன்று நடத்தப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினத்தின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந் தரசிவம் பிரதம விருந்தினராகவும், சங்கானைக் கோடடப் பணிப்பாளர் நா. சண்முகசுந்தரம், வலிகாமம் வலய திட்டமிடல் பணிப்பாளர் கா.சந்திரபாலன், உடுவில் கோட்டப் பணிப்பாளர் செ. குபேரநாதன், சங்கானை கோட்டப் பொறுப்பாளர் அ.அன்பு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (48)

## நூற்றாண்டு மண்டபத் திறப்பு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மாணிக்கம் - பாக்கியம் ஞாபகா ர்த்த நூற்றாண்டு மண்டபத் திறப்புவிழா இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு - ஓய்வு பெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளர் இ. நடராசா தலைமையில் நடை பெறவுள்ள இந்த கட்டத்தை மாணிக்கம் சுப்பிரமணியம் திறந்து வைக்கவுள்ளார்.

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந்த், பிரபுதேவா, வடிவேல், நமீதா நடித்த

**எங்கள் அண்ணா** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

DARE DRAVIN

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45, (பு.நே)

(சி-2723)

**நாகம்ஸ்** சுன்னாகம்

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், நடித்த **அரசாட்சி**

தீபாவளி வெளியீடாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான R.B.சௌத்திரியின் சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த

**சத்ரபதி** (ரீல்ஸ்)



முற்பதிவுகளுக்கு யாழ்.பெயின்ற் காடன், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். நாகம்ஸ் சினிமா

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00.10.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று மட்டும் ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

**7/G ரெயின்போ காலனி**

இது ஒரு உண்மைக் கதை

11.11.முதல் அஜித் + அஜித்

**அட்டகாசம்**

பு.நே 10.30, 2.30, 6.30 மட்டும்

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-3310)

## சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 31/4 பரப்புடைய காணி வீடு விற்பனைக்கு உண்டு. மேலதிக தொடர்புகளுக்கு 0777 145282

(978)

# பேச்சை ஆரம்பிக்காமல் நிதியைப்பெற இரட்டை வேடம் போடுகிறார் ஜனாதிபதி!

## ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் பற்றி ஜனாதிபதி சந்திரிகா தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் ஒன்றையும், ஜே.வி.பியிடம் வேறொன்றையும் பேசுகிறார். அதன்மூலம் சமாதான விடயத்தில் ஜனாதிபதி இரட்டை வேடம் போடுகிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஜீ. எல்.பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

மேல் மாகாண மக்கள் முன்னணியால் கடந்த சனிக்கிழமையன்று நடத்தப்பட்ட சமாதானப் பயணம் - இங்கிருந்து எங்கே என்ற தலைப்பிலான அரசியல் கலந்துரையாடலில் பங்குபற்றி உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்-

கடந்தவாரம் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இலங்கை வந்திருந்தார். இந்தவாரம் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இலங்கை வருகிறார். யார் வந்தாலும், சமாதான முயற்சி விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்குள் உறுதியான ஒருமைப்பாடு இல்லாத நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

2006 ஆம் ஆண்டுவரை இன்றைய சமாதான அரசியல் நிலைமையை நீடிப்பதற்கு இடம்தர மாட்டோம். அடுத்த ஆண்டு எமது ஆட்சியை ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையில் ஏற்படுத்தியே தீருவோம்.

அமெரிக்காவில் இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாது. அதேபோன்ற சட்டம் இலங்கையிலும் இருக்கிறது.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனும், அவரது கட்சியும் எமது கூட்டணியில் உறுதியாக நிற்கின்றார்கள். எமது சமாதான முன்னேற்றப்பாடுகள் காரணமாக மனோ கணேசன் எம்முடன் நிற்பது எமக்குத் தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார்.



## இந்திய மீனவரைக் கட்டுப்படுத்த

# ஜனாதிபதி சந்திரிகாவிடம் ரிசாத் பதியுதீன் கோரிக்கை!

இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுக்கும் வகையில், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புனர்வாழ்வு மற்றும் வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.

இந்தியாவில் தங்கியிருந்த ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட அவர்-

கடற்தொழிலையே நம்பியுள்ள மன்னார் மீனவர்கள் இந்திய மீனவர்களின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்சமயம் மன்னார் மீனவர்கள் இதற்கு எதிராக நடத்திவரும் போராட்டம் நியாயமானது. எனவே, இது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துங்கள்.

கடந்த பல வருடங்களாக இலங்கையின் மன்னார் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதன்மூலம், இலங்கையின் பெருமளவு வளங்கள் சூறையாடப்படுவதாகவும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் குறிப்பிட்டுள்ளார். (01)

# இ.தொ.கா - ஜே.வி.பியிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

அரசாங்கத்தின் அங்கத்துவக் கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்க்கும், ஜே.வி.பிக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

பண்டாரவளைப் பகுதியிலுள்ள கேசன் குளப்பகுதியில் புனரமைப்பு மேறகொள்ளப்படவுள்ளதால், அங்கு விவசாயத்தில் ஈடுபட்டவர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான எம்.சச்சிதானந்தன் தெரிவித்தார்.

இந்தக் குளப்பகுதியில் சுமார் 10 வருடங்களாக 34 குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டுவருகின்றன.

இந்த நிலையில் ஜே.வி.பியின் உறுப்பினர்களும், விவசாயத்துறை அதிகாரிகளும் அங்கு சென்று குறிப்பிட்ட குடும்பங்களை வெளியேறக்கூறியபோது, அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் மக்களின் சார்பில் பிரதிக்குழுக்களின் தலைவர் எம்.சச்சிதானந்தன் கருத்து வெளியிட்டது குறித்து, அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க தமது ஆட்சேபனையைத் தெரித்தார்.

தமது திட்டத்தின்கீழ் குறிப்பிடட கேசன் குளம் புனரமைக்கப்படவுள்ளமையால், அதனை மீண்டும் பொறுப்பேற்க வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், சட்டவிரோதமாக விவசாயம் மேற்கொள்ளப்படும் இடத்தைத் தாம் அமைச்சு மீளப்பெறும் என்றும் தெரிவித்தார்.

இதனால், இரு கட்சிக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. (01)

# பிக்குகளின் கௌரவத்தை ஹெல உறுமயவே சிதைத்தது

## தேசப்பற்று இயக்கம் குற்றச்சாட்டு

ஜாதிக ஹெல உறுமய தனது நடவடிக்கைகளால் பௌத்த பிக்குகளின் கௌரவத்தைச் சிதைத்து விட்டதாக, தேசிய தேசப்பற்று இயக்கத்தின் அமைப்பாளரான வண.எல்லே குணவன்ச தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பௌத்த பிக்குகளின் கௌரவத்தைச் சிதைத்தது தொடர்பான முழுப் பொறுப்பையும் ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஜாதிக ஹெல உறுமய தொடங்கப்பட்டபோதே இதன் முடிவு குழப்பத்திலேயே முடியும் என்று நான் தெரிவித்திருந்தேன். அது தற்போது உறுதியாகியுள்ளது.

அத்துடன், ஜாதிக ஹெல உறுமயவினர் தமது அரசியல் நடவடிக்கையின்போது பௌத்த கொடி, புனித வெள்ளரசு மற்றும் பௌத்த நூல்கள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர். இது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

# ஹெரோயினுடன் வந்த ஐவர் மன்னாரில் கைது!

தலை மன்னார் கடற்பகுதியில் ஒரு கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் ஐவர் கைது செய்யப்பட்டனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இவர்கள் தலைமன்னார்க் கடற்கரையில் படகில் வந்து இறங்கியபோதே, பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இதன்போது இருவர் தப்பிச் சென்றதாகவும் கூறப்பட்டது.

இவர்கள் ஐவரும் தலைமன்னார், அங்கொடை, டிக்கோயாப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைப் பொலிஸார் தலைமன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதே - இவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களாக 7 பேர் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக ஏழுபேரை நியமிக்கவுள்ளதாகவும், இவர்களின் பெயர்கள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாகவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான றஞ்சித் அபேசூரிய தெரிவித்தார்.

இந்த ஏழு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களையும் நியமனம் செய்வதற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.

எத்தனை பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமெனத் தமக்கு அறிவிக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ் மா அதிபர் சந்திர பெர்னாண்டோவைக் கேட்டுள்ளது.

இரண்டு பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் பெயர்கள் ஏற்கனவே ஆணைக்குழுவின் கைவசம் உள்ளன. ஐந்து பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், சிரேஷ்டபொலிஸ் மா அதிபர்களின் நியமனத்துக்குத் தகுதியுடைவர்களாக உள்ளனர்.

ஆனால், பல பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மீதான விசாரணைகள் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் - பேராசிரியர் எம்.ரி.எ.புர்கான் எ.டி.சன்.குணசேகரா, வண.தும்புலே சீலாக்கந்த தேரர், டொக்டர் எஸ். ஜே.ஸ்ரீபன், எஸ்.பி.பண்டுசேன மற்றும் எம்.கோபாலரத்தினம் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

# 12 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களை கடற்படையினர் நேற்று அதிகாலை கைதுசெய்துள்ளனர்.

அவர்கள் வந்த மூன்று இழுவைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதுடன், அவர்களின் இழுவைப் படகுகள் காரை நகருக்கு கொண்டு செல்லப்படுமென்று தலைமன்னார் பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை, மன்னார் பேசாலை மீனவர்களின் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டதைத் தொடர்ந்து மீனவர்களின் பணிகள் வழமைக்கு திரும்பியுள்ளன.

# இறக்குமதி பொருட்களுக்கான வரி அரசாங்கத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் 100 பொருட்களுக்கான வரியை அரசாங்கம் அதிகரித்துள்ளது.

பழங்கள், மரக்கறி, உடைகள் மற்றும் ஜாம், மாஜரீன், வாசனைத் திரவியங்கள் உட்பட்ட 100 பொருட்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது இவற்றுக்கான வரி - 55 சதவீதமாக அறவிடப்பட்டுவருவதாகவும், புதிய வரி அறிமுகத்தைத் தொடர்ந்து இவற்றின் வரி 15 முதல் 20 சதவீதமாக அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு திணைக்கள ஊழியர் கைது

(கொழும்பு)

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின்பேரில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள ஊழியர் ஒருவர் லஞ்சம் மற்றும் ஊழல்கள் விசாரணை செய்யும் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 13 லட்சத்துக்கான சொத்துக்களின் விபரங்களை ஒழுங்காகத் தெரிவிக்காத காரணத்தால், இவர் கைதுசெய்யப்பட்டார். இவர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## எஸ்.பி.திஸநாயக்காவின்

# கடவுச்சீட்டை விடுவிக்கக் கோரும் மனுவை நீதிவான் நிராகரித்தார்

சமுர்த்தி அமைச்சில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சுமார் 31 லட்சம்ரூபா மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்காவின் கடவுச்சீட்டை விடுக்கக் கோரும் மனுவைக் கொழும்பு நீதிவான் நிராகரித்தார்.

எனினும், பிரதிவாதி, இந்த மாதம் 27 ஆம் திகதியில் இருந்து டிசம்பர் மாதம் 5 ஆம் திகதிவரை ஒரு மாத காலப்பகுதிக்கு வெளிநாடு செல்லவேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கையை நீதிவான் ஏற்று, கடவுச்சீட்டை 10 லட்சம் ரூபா ரொக்கப்பிணையிலும், இரணடு பேரின் சரீரப்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

குற்றச்சாட்டுத் தொடர்பாகத் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், இதனை அடுத்து சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கமைய பிரதிவாதிகளைக் கைது செய்யவுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்த மனுவில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கா உட்பட 6 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரசு - புலிகளின் பேச்சை ஊக்குவிப்பதற்குத் திட்டம்

## சர்வதேச மாநாட்டில் தீர்மானம்

சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட 5 அம்ச செயற்திட்டத்தை வகுப்பது என்று இந்திய ஐரோப்பிய கூட்டமைப்பு மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஐந்து அம்சத்திட்டத்தில், இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதியான வழியில் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளும், அரச தரப்பிலும் உறுதி பூண்டிருப்பதற்கு வரவேற்பு தெரிவித்ததுடன், சமரச பேச்சை மீண்டும் தாமதமின்றி ஆரம்பிக்கும்படி, இரு தரப்பையும் ஊக்குவிக்கவும் முடிவுசெய்வது எனவும் ஒரு திட்டமொன்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

# அவுஸ்ரேலிய அணி மீது ஹர்பஜன் சிங் பாய்ச்சல்!



தோற்றதால் ஆடுகளத்தைக் குறை சொல்வது சரியல்ல என அவுஸ்ரேலிய அணி மீது ஹர்பஜன்சிங் பாய்ந்துள்ளார்.

இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் 2 ஆவது இனிங்ஸில் 29 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். குறைந்த வெற்றி இலக்கை எட்ட முடியாத நிலையில் மும்பை ஆடுகளம் டெஸ்ட் போட்டிக்கான தகுதியை எட்டவில்லை என்று அவுஸ்ரேலியக் கப்டன் ரிக்கி பொண்டிங் குற்றஞ்சாட்டினார். ஒரு சில அவுஸ்ரேலிய வீரர்களும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டனர். இந்த ஆட்டம் 2 நாட்களில் முடிந்த காரணத்தால் மும்பை ஆடுகளத்தின் எதிர்காலம் தற்போது கேள்விக்குறியாகி இருக்கிறது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய கப்டன் ரிக்கி பொண்டிங்குக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஹர்பஜன் பேட்டி அளித்துள்ளார். இது தொடர்பாக ஹர்பஜன் கூறுகையில்- அவுஸ்ரேலிய வீரர்களுக்கு இது போன்ற நடவடிக்கைகள் வாடிக்கையாகி விட்டது. நாங்கள் அவுஸ்ரேலிய சுற்றுப்பயணம் செய்தபோது பெர்த் ஆடுகளம் பற்றி ஒருபோதும் குறை கூறியது கிடையாது. இங்கிலாந்திலுள்ள பவுன்சர் ஆடுகளத்தை பற்றியும் இந்திய வீரர்கள் கருத்துத் தெரிவித்தது கிடையாது.

பின்னர் அவுஸ்ரேலிய வீரர்கள் மட்டும் ஏன் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்று தெரியவில்லை. மும்பை ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானது என்பது போட்டி தொடங்குவதற்கு முன்பே அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இதுபோன்ற ஆடு களங்களில் நிதானமாக தடுப்பாட்டத்தைக் கையாண்டிருந்தால் அவுஸ்ரேலியா வெற்றி பெற்றிருக்க முடியும்.

வேகப்பந்து வீச்சாளர் ஜிலெஸ்பி இதை நன்றாக புரிந்துகொண்டு ஆடினார். முன்னணி அவுஸ்ரேலிய வீரர்கள் இதைப் புரிந்துகொள்ளவில்லை. 3 ஆவது நாளில் இந்திய வீரர்கள் டெண்டுல்கர் மற்றும் லக்ஷ்மன் சூழ்நிலைக்கு தகுந்தபடி நிதானமாக ஓட்டங்கள் எடுத்தனர். இது போன்ற அணுகுமுறைக்கு நல்ல பலன் உண்டு என்றார்.

2001 ஆம் ஆண்டு மும்பை ஆடுகளத்தில் நடந்த ஒருநாள் போட்டியில் இந்தியா 240 ஓட்ட வெற்றி இலக்கை எட்டமுடியாமல் அவுஸ்ரேலியாவிடம் தோல்வி கண்டது. அப்போதும் இந்தியாவுக்கு இது போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டன.

ஆனால், இந்திய வீரர்கள் யாரும் ஆடுகளத்தைக் குறை சொல்லவில்லை என்று ஹர்பஜன்சிங் கூறினார்.

இந்திய அணி கங்கூலியை மட்டுமே நம்பிக்கொண்டிராமல் இன்னொரு கப்டனைத் தயார் செய்ய வேண்டும் என மார்க்வோ கூறியிருந்தார். இதுபோன்ற ஆலோசனைகளை அவுஸ்ரேலிய அணிக்கு மார்க்வோ கொடுத்தால் போதும்.

கங்கூலி 75 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் மட்டும் 9 ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களை எடுத்திருக்கிறார். எனவே அவருக்கு மார்க்வோ அளவுக்கு அனுபவம் இருக்கிறது. எனவே கப்டன் பதவி பற்றி அவர் கருத்துத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. சர்வதேச போட்டிகள் பலவற்றில் கங்கூலி தலைமையிலான இந்திய அணி மகத்தான சாதனைகள் படைத்திருக்கிறது எனவும் ஹர்பஜன் தெரிவித்தார்.

## நியூஸிலாந்து பயணத்துக்கான இலங்கை அணியிலிருந்து களுவிதாரண நீக்கம்!

(கொழும்பு)

நியூஸிலாந்து சுற்றுப்பயணத்துக்கான இலங்கை அணியில் இருந்து களுவிதாரண நீக்கப்பட்டார்.

இலங்கை கிரிக்கெட் அணி அடுத்த மாதம் நியூஸிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இந்த சுற்றுப்பயணத்துக்கான இலங்கை அணியில் இருந்து விக்கெட் காப்பாளர் களுவிதாரண நீக்கப்பட்டார்.

20 பேர் கொண்ட பயிற்சி முகாம் பட்டியல் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும் இந்தப் பட்டியலில் இடம்பிடிக்கவில்லை.

ஆனால் சுற்றுப்பயணத்தின் கடைசியில் அவர் அணிக்கு திரும்புவார் என்று கூறப்பட்டுள்ளது. தேர்வுசெய்யப்பட்டவர்கள் விபரம் வருமாறு -

அத்தப்பத்து, ஜெயவர்த்தன, ஜெயசூரியா, சங்ககார, தில்ஷான், வாஸ், சந்தன, சொய்சா, தில்ஹார, ஹேரத், ஜெயந்த, சமரவீர, கண்டம்பி, கவுசல்ய லொக்கு ஆராய்ச்சி, மலிங்க, இயன் டானியல், ம.ஃ.ரூப், குலசேகர, ஜெகன் முபாரக், பிரசன்ன ஜெயவர்த்தன.

## சாதகமற்ற ஆடுகளங்களிலும் பந்துவீசுவதில் பிரச்சினையில்லை

### சகீர்கான் கூறுகிறார்



மும்பை போன்ற சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களில் பந்துவீசுவதில் தனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது என சகீர்கான் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் இந்திய கிரிக்கெட் அணி சுற்றுப்பயணம் செய்தபோது, வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் காயம் காரணமாக அணியில் இடம்பிடிக்கவில்லை.

இந்த நிலையில் உள்ளூரில் சமீபத்தில் நடந்து முடிந்த அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் போட்டியில் சகீர்கான் சிறப்பாக பந்து வீசினார். காயம் குணமடைந்து அணிக்குத் திரும்பி இருக்கிறார். இதுபற்றி அவர் அளித்த பேட்டியில் -

முழுக்குணத்துடன் இந்திய அணிக்குத் திரும்பி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. மும்பை போன்ற சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களில் பந்துவீசுவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. அடுத்து கொல்கத்தாவில் நடக்கவுள்ள பாகிஸ்தானுடனான ஒரு நாள் போட்டியில் சிறப்பாக பந்துவீச இலக்கு வைத்துள்ளேன்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் என்னால் பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஆடமுடியவில்லை. அந்தக் குறையைப் போக்கிக்கொள்ள சரியான வாய்ப்பு கிடைத்துள்ளது என்றார்.

## களுவிதாரண ஓய்வுபெற்றார்

(கொழும்பு)

சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக இலங்கை அணியின் விக்கெட் காப்பாளர் றொமேஷ் களுவிதாரண நேற்று அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்கு தாம் ஆற்றிய பணிகளிலிருந்து மகிழ்ச்சியுடன் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ள களுவிதாரண - தனது கிரிக்கெட் வாழ்க்கை பிரகாசிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

இவர் 1992/93 காலப்பகுதியில் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். களுவிதாரண இதுவரை 49 டெஸ்ட் போட்டிகளில் 3 சதங்கள், 9 அரைச்சதம் உட்பட 1933 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இவர் இதுவரை 189 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 2 சதங்கள், 23 அரைச்சதங்கள் உட்பட 3713 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

## மாஸ்டர்ஸ் ரெனிஸ்; சபின் மீண்டும் சம்பியன்!



(பாரிஸ்)

மாஸ்டர்ஸ் ரெனிஸ் கிண்ணத்தை ரஷ்யாவின் மாரட் சபின் கைப்பற்றினார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் ஏ.ரி.பி அந்தஸ்து பெற்ற மாஸ்டர்ஸ் ரெனிஸ் தொடர் நடந்தது. ஆறாம் நிலை வீரரான சபின், செக் குடியரசின் ரொடிக் ஸ்டிபனக் ஆகியோர் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் மோதினர்.

இரண்டு மணி 18 நிமிடங்கள் நடந்த இந்தப் போட்டியில் சபின் 6-3, 7-6, 6-3 என்ற நேர் செட்களில் ஸ்டிபனக்கை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

2000, 2002 ஆம் ஆண்டுகளில் பட்டம் வென்ற சபின் மூன்றாவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றினார். இதன் மூலம் இத்தொடரில் மூன்று முறை பட்டம் வெல்லும் உலகின் இரண்டாவது வீரர் என்ற பெருமையை சபின் பெற்றார்.

முன்னதாக ஜெர்மனியின் போரிஸ் பெக்கர் (1986, 1989, 1992) மட்டுமே பாரிஸ் மாஸ்டர்ஸ் தொடரில் மூன்றுமுறை சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.






நியூயோர்க்கில் நடந்த 'சிட்டி மாரத்தான்' போட்டியில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஹென்ரிக் ரமாலா முதலிடத்தைப் பிடித்தார். இவர் போட்டித் தூரத்தை (26.2 மைல்) 2 மணி 9 நிமிடம் 28 விநாடிகளில் கடந்தார். வென்ற மகிழ்ச்சியில் தன் நாட்டுக்கொடியை ஏந்தி வலம் வருகிறார் ரமாலா.

## மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்

## சென்.அன்ரனிஸ், சென்.பீற்றர்ஸ் அணிகள் மூன்றாவது சுற்றுக்கு தகுதிபெற்றன!

(வடமராட்சி)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவினர் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டங்களாக விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலில் விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். அன்ரனிஸ் அணி மோதியது. ஆட்டம் தொடங்கி 15 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை விநாயகர் அணியினர் பயன்படுத்தத் தவறிவிட்டனர். ஆனால் 20 ஆவது நிமிடத்திலும், 22 ஆவது நிமிடத்திலும் கிடைத்த வாய்ப்பை சென். அன்ரனிஸ் அணியினர் சரியாகப் பயன்படுத்தி 2 கோல்களைப் பெற்றனர்.

இந்த கோல்களை அவ்வணி வீரர் பிக்லஸ் தலையால் இடித்துக் கோலாக்கினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் 2-0 என்ற கோல்கணக்கில் சென் அன்ரனிஸ் அணியினர் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்டபோது - 19 ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் அணியினரால் அடிக்கப்பட்ட பந்தை விநாயகர் அணி வீரர் பிரபா தடுக்க முற்பட்டபோது அவர் காலில் பட்டு அவர் பக்கமே கோலானது.

அதைத் தொடர்ந்து சென் அன்ரனிஸ் அணி வீரர்களால் 28 ஆவது நிமிடத்தில் சார்லஸ் தட்டிய பந்தை சதீஸ் தலையால் இடித்தும், 29 ஆவது நிமிடத்தில் கோல் கம்பத்தில் பட்டுவந்த பந்தை லதீஸ அடித்தும் கோலாக்கினர்.

அதன்பின்னர் விநாயகர் அணியினர் கடினமாக விளையாடிய போதும் கோலடிக்கமுடியவில்லை. இதனால் சென். அன்ரனிஸ் அணி, விநாயகர் அணியை 5-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்றது.

அதைத் தொடர்ந்து சென். பீற்றர்ஸ் அணியை எதிர்த்து நவசக்தி அணி மோதியது.

ஆட்டம் தொடங்கப்பட்டு முதல் 2 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை வெளியில் அடித்தும், 15 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையிலும் பயன்படுத்த சென். பீற்றர்ஸ் அணியினர் தவறி விட்டனர்.

இதேபோல், நவசக்தி அணியினரும் 10 ஆவது, 12 ஆவது, 14 ஆவது, 19 ஆவது நிமிடங்களில் கிடைத்த வாய்ப்பையும் 23 ஆவது நிமிடத்தில் கிடைத்த கோணர் வாய்ப்பையும் சரியான முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

ஆனால் 17 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை சென். பீற்றர்ஸ் அணியினர் மிகச்சிறப்பாகப் பயன்படுத்தி கோலாக்கினர்.

இந்தக் கோலே வெற்றியை அவர்கள் பக்கமாக மாற்றியது. இதனை அவ்வணி வீரர் அமிர்தராஜ் அடித்தார்.

இதனால் இடைவேளைக்கு முன்னர் சென். பீற்றர்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் முதல் 5 ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதையை நவசக்தி அணியினர் அடித்தபோது சென். பீற்றர்ஸ் கோல் காப்பாளர் மிகச் சிறப்பாகத் தடுத்துக் கொண்டார். இதைவிட நவசக்தி அணிவீரர் ஒருவர் தவறாக விளையாடியமைக்காக மஞ்சள் அட்டையும் காட்டப்பட்டது.

அதன் பின்னர் 19 ஆவது நிமிடத்திலும் இறுதியாக ஒரு நிமிடம் இருக்கும் வேளையிலும் கிடைத்த சந்தர்ப்பங்களை நவசக்தி அணியினர் கோலாக்கத் தவறிவிட்டனர். இதனால் சென் பீற்றர்ஸ் அணி, நவசக்தி அணியை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்குத் தெரிவாகியது.

(12)

# தகவல் தொழில்நுட்ப உலகில் நாமும் பங்காளிகளாகவேண்டும்

## பரிசளிப்பு நிகழ்வில் கஜேந்திரகுமார் எம்.பி.

இன்றைய உலகு ஒரு கிராமமாக எப்பொழுதோ சுருங்கிவிட்டது. இந்தக் கிராமத்தில் தகவல் தொழில்நுட்பமே மேலோங்கி நிற்கிறது. இந்தத் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுத்துநிற்கக் கூடியவர்களே விருத்தியடைந்து வாழமுடியும். இங்கேயும் தக்கன பிழைத்தல் என்ற நியதியே வெளிப்படுகிறது. நாம் பலமுள்ளவர்களாக நிலைத்திருக்க வேண்டுமாயின் இந்தத் தகவல் தொழில்நுட்ப உலகில் நாமும் பங்காளிகளாக மாறவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறினார்.

கரவெட்டி ஞானசாரியர் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் ச.ஸ்ரீராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையில் அமைக்கப்பட்ட கணினி அறையைத் திறந்துவைத்ததுடன் மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எமது இனத்தின் எதிர்காலத்தைத் தாங்கிநிற்கப்போகிறவர்கள் இன்றைய குழந்தைகளே. இவர்களை வல்லவர்களாக, ஒழுக்க சீலர்களாக வளர்த்தெடுக்கவேண்டிய கடமை ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் சார்ந்ததாகும். இன்று எமது இனம் பல்வேறுபட்ட நெருக்கடிகளின் மத்தியிலேயே வாழ்ந்துவருவது நியதியாக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் மாணவர்களது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளும் நெருக்கடிக்குள், பற்றாக்குறையான வளங்களுக்குள் உட்படுத்தப்பட்டுவிட்டன.

எமது பிரதேசத்தின் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள பாடசாலையை நாம் சென்றுபார்த்தாலும் அங்கே பிரதானமாக கோரிக்கைகளாக எங்கள் முன் வைக்கப்படுபவை கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்பதாகும். உங்களது பிரதிநிதிகள் என்ற வகையில் எங்கள் ஒவ்வொருவருக்கும் வருடத்துக்கு 50 லட்சம் ரூபாவே ஒதுக்கீடு செய்யப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (31)

# ஓய்வூதிய வவுச்சர்களுடன் கணிப்பீடும் அனுப்பிவைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகம் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களில், ஓய்வூதியத் திணைக்களத்தின் சுற்றுநிருபத்திற்கு அமைய, மீளாய்வு செய்யப்படத் தகுதியானவர்களில் மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியர்களுடைய மீளாய்வுக் கணிப்பீட்டுத்தாள் இந்த மாதப் பற்றுச்சீட்டுடன் இணைத்து அனுப்பபட்டு வருகிறது.

ஒருதொகுதி ஓய்வூதியர்களுக்கு இந்தமாதம் பற்றுச் சீட்டுடனும், எஞ்சிய பகுதியினருக்கு டிசம்பர் மாதப் பற்றுச் சீட்டுடனும் இந்தக் கணிப்பீட்டுத் தாள் அனுப்பி வைக்கப்படும் என பிரதேச செயலக ஓய்வூதியப் பகுதியினர் தெரிவித்தனர். (24)

# வீடுகளில் வெட்டப்படும் மரக்கிளைகளை வீதிகளில் போடுவதால் போக்குவரத்து பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பருவகால மழை பெய்யத் தொடங்கியதை அடுத்து வீடுகளில் வெட்டி அகற்றப்படுகின்ற மரக் கிளைகளை வீதிகளில் போடுவதால், போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதோடு சுற்றுச் சூழல் மாசடைந்துவருகிறது.

நகரின் பல பகுதிகளிலும் இந்த நிலை தோன்றியுள்ளபோது, குறிப்பாக பிரதான போக்குவரத்தும், நெருக்கடியும் கொண்ட கே.கே.எஸ் வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதிகளில் இந்த நிலை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை நாவாந்துறைப் பகுதியில் கழிவுகளைக் கொட்ட பொதுமக்கள் எதிர்ப்புக் காட்டியதையடுத்து வீதிகளில் வீட்டுக் குப்பைகளைப் போடவேண்டாமென யாழ். மாநகரசபை அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (206)

# தொடரும் மழையால் நெற்செய்கை பாதிப்பு

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் கிழக்கு, வாதரவத்தை, சிறுப்பிட்டி, நீர்வேலி போன்ற பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழையால், பல நூறு ஏக்கர்கணக்கான நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒகஸ்ட் மாதத்திலிருந்து தொடர்ந்துபெய்துவரும் மழையால் நுனிவிற்குளம், தட்டாங்கேணிக் குளம், வரிக்கம்பரைக் குளம், கிளுவோரைக் கிராலிக்குளம் போன்ற வற்றைச் சூழவுள்ள பகுதிகள் நெல் விதைக்கப்படாது வெறும் நிலங்களாக இருக்கின்றன.

அடுத்து புத்தூர் வாதரவத்தை, சிறுப்பிட்டி, நீர்வேலி போன்ற பகுதிகளிலுள்ள பயிர்கள் அழிந்ததால், இரண்டாம் முறையும் நெல் விதைத்தும், தொடர்ந்து பெய்துவரும் மழையால் அழிந்துபோயுள்ளன.

பெருமளவு தரிசு நிலங்கள் இப்பகுதியில் இருந்தும், விளைநிலங்களிலுள்ள மித மிஞ்சிய நீரை வெளியேற்றுவதற்கு ஏற்ற கால்வாய்கள் இந்தப் பகுதிகளில் இல்லாமை, இந்தப் பகுதி பாதிப்புக்கு ஒரு காரணமாக அமைநதுள்ளது.

இந்தப் பகுதியிலுள்ள தூர்ந்த சிறுகால்வாய்களையும், புதிய கால்வாய்களையும் அமைத்து, இந்த வழியிலிருந்து இவ்வாறான பாதிப்பைத் தடுப்பதற்கு விவசாயச் சம்மேளனங்களும், கமநல சேவை நிலையங்களும் கூடிய கவனம் செலுத்துதல் பொருத்தமானதாகும். (110)



காக்கைதீவு முத்தமிழ் பாலர் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மானிப்பாய் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் சற்குணலிங்கம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (91)



அண்மையில் வேதாரணிய குருபரம்பரை சைவக்குருமார் அர்ச்சகர்களின் நிறுவகமான - அகில உலக சைவக் குருமார் சம்மேளனம், கம்பர்மலை வல்வெட்டி வன்னிச்சி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டபோது, அருகில் சிவாச்சாரிய பீடாதிபதி சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணி தேசிகரும் செயற்குழு உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். (116)

# சின்னஞ்சிறு செய்திகள்

## விளையாட்டு விழா

(தெல்லிப்பளை)

தீபாவளியை முன்னிட்டு பன்னாலை கணேசா சனசமூக நிலையத்தினர் நடத்தும் விளையாட்டு விழா, நாளை சி.வேலாயுதம் தலைமையில் கழக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மரதனோட்டம், சங்கீதக் கதிரை, தடையோட்டம், மெதுவான சைக்கிளோட்டம், தயிர்முட்டி அடித்தல், கிளிக்கோடு, எல்லே, கயிறுழுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (72)

## கொல்களத்தை இடமாற்றக் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி - கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி வீதியில், கல்லூரிக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள கொல்களத்தை அகற்றுமாறு அந்தப்பகுதி மக்களும், மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை இந்தக் கொல்களம் உருவாக்குகிறது. அத்துடன் இறைச்சிக்கழிவுகளை அகற்றாமல் அந்த இடத்திலேயே விடுவதால், அந்தப் பகுதியில் கட்டாக்காலி நாய்களும் அதிகரித்துள்ளன. இதனால் மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் உடனடியாக இந்த இடத்திலிருந்து இந்தக் கொல்களத்தை அகற்றுமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர். (14)

## விபத்தில் இளைஞன் காயம்

பொன்னாலைச் சந்திக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.நகரிலிருந்து காரைநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றே சைக்கிளில் சென்ற இளைஞரை நேற்றுமுன்தினம் நண்பகல் 1 மணியளவில் மோதியது. இந்தச் சம்பவத்தில் தலையில் படுகாயமுற்ற இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். (52)

## பரஞ்சோதி வித்தியாலய பரிசளிப்பு விழா

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா - எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் எஸ். சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இநத நிகழ்வுக்கு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.காங்கேயன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக டிறிபேக் கல்லூரி அதிபர் திருமதி நாகேந்திரராசா, கனடாவில் வசிக்கும் பழைய மாணவர்களான வே. குலசிங்கம், க.நாகராசா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (101)

## சமய தீட்சை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை அனுசரணையுடன், கொக்குவில் மஞ்சவனப்பதியில் எதிர்வரும் 15 ஆம திகதி காலை 9.00 மணிக்கு சமய தீட்சை வழங்க ஆலய நிர்வாக சபையினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

சமய தீட்சை பெறவிரும்பும் சைவ அன்பர்கள் ஆசார சீலர்களாகக் குறித்த நேரத்தில் சமூகம் தருமாறு சைவபரிபாலன சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## பத்தாயிரம் பனை விதைகள் நடுகை

வடமராட்சி கிழக்கில் பெரும் தொகையான பனை மரங்கள் இராணுவததினரால் தறிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இதனால் பனை வளத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தில் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறையின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பனை விதைகளை நாட்டியுள்ளது.

வடமராட்சி கிழக்கு கேவில், முள்ளியான் ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள தரிசு நிலங்களில் 10 ஆயிரம் பனை விதைகள் நாட்டப்பட்டுள்ளன. (17)

## பாம்புக்கடிக்கு இலக்கானவர் மரணம்

பாம்புக்கடிக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபரொருவர் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார்.

முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த குகன் என்பவரே உயிரிழந்தவராவர். பிரஸ்தாப நபர் வீட்டில் உறக்கத்திலிருந்தவேளை பாம்புக்கடிக்கு இலக்காகி, அயலிலிருந்த வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையே அவர் உயிரிழந்தார். (12)

## காணி கையளிப்பு

பருத்தித்துறையில் வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் அமைக்கவென, வடக்கு - கிழக்கு காணி ஆணையாளரின் பணிப்பின் பேரில், புலோலி கமநல நிலையத்துக்கு அருகில் 4 பரப்புக் காணியொன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திணைக்களத்துக்கான அலுவலகம் 30 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. (17)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : க.காயத்திரி
முகவரி :மாசியப்பிட்டி

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்




வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெற்ற இயங்கியல் கண்காட்சியில், வல்வை நகரசபையின் செயலர், எஸ். திருஞானசம்பந்தர் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு - 2004

(நேற்றைய தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| 41 | வ/வ/355 | திரு.சோமநாதர் இரத்தினம் |
| 42 | வ/வ/361 | திரு.பொன்னையா துரையப்பா |
| 43 | வ/வ/367 | திருமதி.பதஞ்செல்வி பொன்னம்பலம் |
| 44 | வ/வ/374 | திரு.நல்லதம்பி கயிலாயபிள்ளை |
| 45 | வ/வ/375 | திரு.ஆறுமுகம் காசிப்பிள்ளை |
| 46 | வ/வ/376 | திரு.அருணாசலம் செல்வராசா |
| 47 | வ/வ/380 | திரு.பொன்னையா பரமு |
| 48 | வ/வ/402 | திரு.செல்லையா குகதாசன் |
| 49 | வ/வ/430 | திரு.வீரசிங்கம் சுப்பிரமணியம் |
| 50 | வ/வ/434 | திருமதி.பிறிஜிற் அன்னம்மா பீற்றர் |
| 51 | வ/வ/439 | திருமதி.சோதி கந்தையா |
| 52 | வ/வ/444 | திரு. இராமு பொன்னுத்துரை |
| 53 | வ/வ/451 | திரு. முத்தையா சிதம்பரப்பிள்ளை |
| 54 | வ/வ/454 | திருமதி. மரியம்மா தம்பிராசா |
| 55 | வ/வ/459 | திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை |
| 56 | வ/வ/462 | திரு.சின்னசாமி பழனிசாமி |
| 57 | வ/வ/463 | திரு.பொன்னையா இராசநாயகம் |
| 58 | வ/வ/471 | திரு.மாரிமுத்து முருகேசு |
| 59 | வ/வ/472 | திரு.செல்லையா பத்மநாதன் |
| 60 | வ/வ/479 | திரு.கனகன் காங்கேசு |
| 61 | வ/வ/496 | திரு.செல்லையா மார்க்கண்டேயர் |
| 62 | வ/வ/522 | திரு.இராயப்பு அந்தோனிப்பிள்ளை |
| 63 | வ/வ/535 | திரு.பொன்னையா திருஞானசம்பந்தன் |
| 64 | வ/வ/549 | திரு.பி.சுப்பிரமணியம் |
| 65 | வ/வ/561 | திரு.வன்னியசிங்கம் முத்தையா |
| 66 | வ/வ/566 | திருமதி.நல்லம்மா மயில்வாகனம் |
| 67 | வ/வ/582 | திரு.கனகர் நாகமணி |
| 68 | வ/வ/589 | திரு.கந்தசாமி சிவராசா |
| 69 | வ/வ/602 | திரு.கந்தையா சிவஞானசுந்தரம் |
| 70 | வ/வ/634 | திரு.கந்தன் ஞானப்பிரகாசம் |
| 71 | வ/வ/635 | திரு.பொன்னையா சுப்பிரமணியம் |
| 72 | வ/வ/643 | திரு.ஆறுமுகம் மயில்வாகனம் |
| 73 | வ/வ/668 | திரு.சின்னமுத்து கருப்பையா |
| 74 | வ/வ/688 | திரு.சபாபதி சூசைப்பிள்ளை |
| 75 | வ/வ/697 | திரு.தம்பு இராசையா |
| 76 | வ/வ/704 | திருமதி.சீவரத்தினம் சின்னத்துரை |

## பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

| | | |
|---|---|---|
| 1 | கி/ப/124 | திரு.சின்னையா கந்தையா |
| 2 | கி/ப/184 | திரு.சின்னத்தம்பி செல்லையா |
| 3 | கி/ப/217 | திரு.தம்பையா செல்லத்துரை |
| 4 | கி/ப/256 | திரு.முத்தையா குழந்தைவேலு |
| 5 | கி/ப/299 | திரு.செல்லப்பா சேனாதிராசா |
| 6 | கி/ப/347 | திருமதி.தங்கம்மா அப்பாப்பிள்ளை |
| 7 | கி/ப/379 | திரு.வைரமுத்து கணபதிப்பிள்ளை |
| 8 | கி/ப/387 | திரு.சின்னத்துரை பாலசுந்தரம் |
| 9 | கி/ப/639 | திரு.கந்தையா காசிப்பிள்ளை |
| 10 | கி/ப/701 | திரு.சின்னர் கந்தையா |
| 11 | கி/ப/805 | திரு.சின்னக்குட்டி இராசையா |
| 12 | கி/ப/860 | திரு.கார்த்திகேசு வேலாயுதம்பிள்ளை |
| 13 | கி/ப/964 | திரு.இரப்பியல் எலியாஸ் |

## முல்லைத்தீவு மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1 | மு/18 | திரு.கனகசுந்தரம் கனகரத்தினம் |
| 2 | மு/19 | திரு.கணவதிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 3 | மு/48 | திருமதி.தங்கம்மா முருகுப்பிள்ளை |
| 4 | மு/53 | திரு.சவரிமுத்து வரப்பிரகாசம் |
| 5 | மு/54 | திரு.பிறன்சிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| 6 | மு/55 | திருமதி.மேரிகிறேஸ் கணேஷபூபன் |
| 7 | மு/63 | திரு. யேமிஸ் பிரான்சீஸ் சேவியர் |
| 8 | மு/76 | திரு.கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை |
| 9 | மு/97 | திருமதி. செல்லம்மா கந்தசாமி |
| 10 | மு/110 | திரு.திசராசசெல்வம் குணரட்ணம் |
| 11 | மு/134 | திரு.இராசதுரை தங்கத்துரை |
| 12 | மு/143 | திரு.சபாபதி நவரத்தினம் |
| 13 | மு/155 | திரு.குமாரு கந்தையா |
| 14 | மு/181 | திரு.இராஜசேகரர் வேகாவனம் |
| 15 | மு/187 | திரு.நாகமணி சிவகுரு |
| 16 | மு/195 | திரு.வேலு சின்னையா |
| 17 | மு/206 | திரு.மாப்பாணர் சந்திரசேகரி |
| 18 | மு/210 | திரு.கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை |
| 19 | மு/215 | திரு.செல்லையா சண்முகம் |
| 20 | மு/227 | திரு.துரைச்சாமி பரராசசிங்கம் |
| 21 | மு/231 | திரு.செல்லத்துரை சங்கரப்பிள்ளை |
| 22 | மு/233 | திரு.நாகமுத்து செல்லத்துரை |
| 23 | மு/268 | திரு.துரைச்சாமி சதாசிவம் |
| 24 | மு/284 | திரு.ஆறுமுகம் நயினார் |
| 25 | மு/285 | திரு.சின்னத்துரை கோபாலசிங்கம் |
| 26 | மு/294 | திரு.கயிலாசபிள்ளை உடையார் இராமநாதன் |
| 27 | மு/303 | திரு.முருகன் கணபதிப்பிள்ளை |
| 28 | மு/310 | திரு.சகாபதி அண்ணாமலை |
| 29 | மு/320 | திரு.கந்தையா வல்லிபுரம் |
| 30 | மு/332 | திரு.இளையவி வேலு |
| 31 | மு/333 | திரு.பொன்னையா சபாரத்தினம் |
| 32 | மு/341 | திரு.ஏரம்பு சின்னையா |
| 33 | மு/353 | திரு.பொன்னையா முத்துராசா |
| 34 | மு/359 | திரு.சிதம்பரப்பிள்ளை சிவானந்தம் |
| 35 | மு/362 | திரு.கனகசபை தங்கராசா |
| 36 | மு/399 | திரு.பொன்னையா கணபதிப்பிள்ளை |
| 37 | மு/408 | திரு.அரியகுட்டி குமாரசாமி |
| 38 | மு/412 | திரு.சரவணமுத்து வேலாயுதம் |
| 39 | மு/416 | திரு.சதாசிவம் தங்கராசா |
| 40 | மு/419 | திரு.வினாசித்தம்பி பரமலிங்கம் |
| 41 | மு/423 | திருமதி.நகுலாம்பிகை தம்பு |
| 42 | மு/426 | திரு.சூசைப்பிள்ளை மரியாம்பிள்ளை |
| 43 | மு/433 | திரு.வேலுப்பிள்ளை குழந்தைவேலு |
| 44 | மு/444 | திரு.சுவாம்பிள்ளைநீக்லஸ் பேர்ணாடியஸ் |
| 45 | மு/464 | திரு.செல்லையா முருகுப்பிள்ளை |
| 46 | மு/468 | திரு.அ.காசிப்பிள்ளை மகாலிங்கம் |
| 47 | மு/470 | திரு.சின்னையா குமாரையா |
| 48 | மு/472 | திரு.கணபதிப்பிள்ளை கதிர்காமு |
| 49 | மு/495 | திரு.பொன்னையா நடராசபிள்ளை |
| 50 | மு/502 | திரு.நாகநாதன் பாலசிங்கம் |
| 51 | மு/504 | திரு.பொன்னம்பலம் தம்பையா |
| 52 | மு/528 | திருமதி.கிரிஸ்ரீனம்மா யாக்கோப்பு |
| 53 | மு/539 | திரு.சோமசுந்தரம் செல்லத்துரை |
| 54 | மு/543 | திரு.ஆபிரகாம் சாமிநாதன் |
| 55 | மு/572 | திரு.சின்னர் சிதம்பரப்பிள்ளை |
| 56 | மு/600 | திரு.ஆறுமுகம் நாகமணி |
| 57 | மு/602 | திரு.வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை |
| 58 | மு/608 | திரு.தேவசகாயம்பிள்ளை தொம்மையப்பு |
| 59 | மு/613 | திரு.வைரவி மாணிக்கம் |
| 60 | மு/623 | திரு.வயித்தி யாக்கோப்பு |
| 61 | மு/624 | திரு.சின்னப்பு கந்தையா |
| 62 | மு/629 | திரு.செபமாலை செபஸ்தி |
| 63 | மு/649 | திரு.பேதுரு யோசேப் |
| 64 | மு/676 | திரு.மாணிக்கம் நடராசா |
| 65 | மு/690 | திரு.சின்னத்தம்பி முருகுப்பிள்ளை |
| 66 | மு/695 | திரு.ஜயாக்குட்டி திருநாவுக்கரசு |
| 67 | மு/699 | திரு.கணபதிப்பிள்ளை சதாசிவம் |
| 68 | மு/726 | திருமதி.செல்லம்மா செல்வரட்ணம் |
| 69 | மு/730 | திருமதி.மனோன்மணி சிவக்கொழுந்து |
| 70 | மு/755 | திரு.சின்னத்தம்பி பொன்னம்பலம் |
| 71 | மு/764 | திரு.செல்லப்பா சின்னத்தம்பி |
| 72 | மு/772 | திரு.சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளை |
| 73 | மு/775 | திரு.செல்லையா சாமிநாதன் |
| 74 | மு/778 | திரு.சுப்பிரமணியம் இராசையா |
| 75 | மு/784 | திரு.ஆறுமுகம் வேலும்மயிலும் |
| 76 | மு/791 | திருமதி.விசாலாட்சி ஆறுமுகம் |
| 77 | மு/849 | திரு.சின்னத்தம்பி மகாதேவன் |
| 78 | மு/851 | திரு.வேதாரணியம் சிதம்பரப்பிள்ளை |
| 79 | மு/863 | திரு.வேலுப்பிள்ளை கார்த்திகேசு |
| 80 | மு/881 | திரு.கந்தவனம் கனகையா |
| 81 | மு/883 | திரு.சின்னையா சிதம்பரப்பிள்ளை |
| 82 | மு/899 | திருமதி.சுபத்திரை கலியாணசுந்தரம் |
| 83 | மு/914 | திரு.வல்லிபுரம் தர்மலிங்கம் |
| 84 | மு/939 | திரு.முடியப்பு சின்னப்பு |
| 85 | மு/940 | திரு.கந்தையா சிவகுரு |
| 86 | மு/944 | திரு.பூதப்பிள்ளை தர்மலிங்கம் |
| 87 | மு/1004 | திரு.தம்பையா பொன்னையா |
| 88 | மு/1005 | திரு.தம்பாப்பிள்ளை செல்லையா |
| 89 | மு/1011 | திருமதி.முத்தம்மா இராசநாயகம் |
| 90 | மு/1012 | திரு.நாகலிங்கம் குலசிங்கம் |
| 91 | மு/1014 | திருமதி.சின்னம்மா வல்லிபுரம் |
| 92 | மு/1026 | திருமதி.அன்னப்பிள்ளை கந்தையா |
| 93 | மு/1028 | திருமதி.பொன்னம்மா கோகிலார் |
| 94 | மு/1032 | திரு.கந்தசாமி சண்முகநாதன் |
| 95 | மு/1045 | திரு.யோசெப்பு அடைக்கலதாஸ் |
| 96 | மு/1055 | திரு.கோயிலார் சிவசாமி |
| 97 | மு/1070 | திரு.அம்பலவாணர் கனகரத்தினம் |
| 98 | மு/1076 | திரு.பிலிப்பு செபஸ்தியாம்பிள்ளை |
| 99 | மு/1083 | திரு.இளையதம்பி அழகுமணி |
| 100 | மு/1087 | திரு.யோசேப் நடராசா |
| 101 | மு/1103 | திரு.நாகநாதி செல்லையா |
| 102 | மு/1108 | திரு.தம்பு சதாசிவம் |
| 103 | மு/1111 | திரு.யோசப்பு சூசைப்பிள்ளை |
| 104 | மு/1115 | திரு.வேலுப்பிள்ளை நல்லையா |
| 105 | மு/1118 | திரு.வேலுப்பிள்ளை சந்திரசேகரம் |
| 106 | மு/1137 | திரு.கணபதிப்பிள்ளை அருளம்பலம் |
| 107 | மு/1150 | திரு.இராசையா தியாகராசா |
| 108 | மு/1169 | திரு.பொன்னையா சின்னத்தம்பி |
| 109 | மு/1178 | திரு.தம்பையா சுப்பிரமணியம் |
| 110 | மு/1181 | திரு.கந்தையா தங்கராசா |
| 111 | மு/1182 | திரு.சிற்றம்பலம் வேலாயுதம் |
| 112 | மு/1197 | திரு.பெரியதம்பி கந்தையா |
| 113 | மு/1204 | திருமதி.சரஸ்வதி கந்தையா |
| 114 | மு/1218 | திரு.இராமலிங்கம் கந்தையா |
| 115 | மு/1219 | திரு.கந்தையா தம்பிஜயா |
| 116 | மு/1227 | செல்வி.லட்சுமி நல்லதம்பி |
| 117 | மு/1228 | திருமதி.செல்லம்மா கந்தையா |
| 118 | மு/1247 | திரு.சபாபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை |
| 119 | மு/1294 | திரு.முருகர் கதிர்காமு |
| 120 | மு/1299 | திருமதி.தங்கப்பிள்ளை சிவராசா |
| 121 | மு/1318 | திரு.சின்னையா வேலுப்பிள்ளை |
| 122 | மு/1322 | திருமதி.சந்திரபூரணி பொன்னையா |
| 123 | மு/1323 | திரு.நாகலிங்கம் கிருஷ்ணபிள்ளை |
| 124 | மு/1329 | திரு.கதிர்காமு சிவகுரு |
| 125 | மு/1331 | திரு.சேனாதிராசா சிவப்பிரகாசம் |
| 126 | மு/1336 | திரு.மயிலன் செல்லத்துரை. |
| 127 | மு/1344 | திரு.இளையதம்பி நவரத்தினம் |
| 128 | மு/1350 | திரு.கந்தையா கதிரமலை |
| 129 | மு/1362 | திருமதி.பரமேஸ்வரி சிவஞானம் |
| 130 | மு/1366 | திரு. நோருதம் அருளப்பு |
| 131 | மு/1373 | திரு.தொம்மை யோசெப்பு |
| 132 | மு/1379 | திரு.பறுனாந்து இறப்பியேல |
| 133 | மு/1411 | திருமதி. தங்கம்மா சிவகுரு |
| 134 | மு/1423 | திரு.மனுவேற்பிள்ளை இராயப்பு |
| 135 | மு/1440 | திரு.சின்னையா பொன்னயைா |
| 136 | மு/1442 | திரு.அவுறாம்பிள்ளை வேதநாயகம் |
| 137 | மு/1461 | திரு.கந்தையா இராசையா |
| 138 | மு/1472 | திரு.சின்னத்தம்பி செல்லத்துரை |
| 139 | மு/1477 | திரு.கார்த்திகேசு கனகசபை |
| 140 | மு/1493 | திருமதி.கனகம்மா சிவசிதம்பரம் |
| 141 | மு/1528 | திருமதி.இராசம்மா சின்னனத்துரை |
| 142 | மு/1529 | திரு.சில்வேஸ்த்திரி அந்தோனி |
| 143 | மு/1533 | திரு.செல்லத்துரை சூசைப்பிள்ளை |
| 144 | மு/1542 | திரு.வினாசித்தம்பி கதிரவேலு |
| 145 | மு/1548 | திருமதி. திரேஸ்லோறன்ஸ் பரராசசிங்கம |

## மன்னார் உதவி அரச அதிபர் பிரிவு

| | | |
|---|---|---|
| 1 | ம/16 | திரு.வாரித்தம்பி மகாலிங்கம் |
| 2 | ம/19 | திருமதி.தெய்வானைப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 3 | ம/23 | திரு.அய்யம்பிள்ளை அருணாசலம் |
| 4 | ம/38 | திரு.சின்னத்தம்பி வயிரவநாதர் |
| 5 | ம/40 | திரு.கயிலாயபிள்ளை ஆறுமுகம் |
| 6 | ம/43 | திரு.பொன்னையா கோபாலபிள்ளை |
| 7 | ம/45 | திரு.சீனித்தம்பி தம்பித்துரை |
| 8 | ம/49 | திரு.தம்பு இரத்தினசிங்கம் |
| 9 | ம/52 | திரு.வயித்திலிங்கம் அரியரத்தினம் |
| 10 | ம/61 | திரு.மாரிமுத்து இரத்தினம் |
| 11 | ம/75 | திரு.சிற்றம்பலம் முருகேசபிள்ளை |
| 12 | ம/92 | திரு.ஜயாத்துரை இராசரெத்தினம் |
| 13 | ம/104 | திரு.தம்பிப்பிள்ளை இராமுப்பிள்ளை |
| 14 | ம/110 | திருமதி.விமலாதேவி குலசபாநாதன் |
| 15 | ம/120 | திரு. ஜயாத்துரை சோமசுந்தரம் |
| 16 | ம/129 | திரு. மனுவேல் கிறிஸ்தியான் |
| 17 | ம/133 | திரு. குருசாமி வீரசிங்கம் |
| 18 | ம/182 | திரு. கந்தையா மயில்வாகனம் |
| 19 | ம/184 | திரு.இராமலிங்கம் செல்லத்துரை |
| 20 | ம/189 | திரு.சேதுகாவலர் இராசையா |
| 21 | ம/207 | திரு.சவிரி சேரம்யோசப்பு |
| 22 | ம/219 | திரு.வேனாட் ஞானசேகரம் |
| 23 | ம/232 | திரு.பொன்னையா சதானந்தன் |
| 24 | ம/244 | திரு.தொம்மை சவிரிமுத்து |
| 25 | ம/264 | திரு.விசயந்தி முடியப்பு |
| 26 | ம/289 | திரு.தம்பிப்பிள்ளை செல்வரத்தினம் |
| 27 | ம/307 | திரு.வீரவாகு முத்துக்குமாரு |
| 28 | ம/336 | திரு.மிக்கல் பிலிப்பு |
| 29 | ம/341 | திரு.அந்தோனி சந்தாம்பிள்ளைகொடுதோர் |
| 30 | ம/354 | திரு.கந்தையா சண்முகநாதன் |
| 31 | ம/356 | திரு.நாகலிங்கம் பொன்னம்பலம் |
| 32 | ம/379 | திரு.நீலன் பொன்னு |
| 33 | ம/386 | திரு.அடைக்கலம் வேதநாயகம் |
| 34 | ம/391 | திருமதி.பாக்கியம் இரத்தினம் |
| 35 | ம/430 | திரு.மிக்கேப்பிள்ளை கிறிஸ்ரோபர் |

*(முற்றும்)*



மாணவர் மலர்


## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

# கணிதம்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றையும் நன்கு வாசித்து, அந்த வினாக்களுக்குரிய மிகச் சரியான விடையைத் தேர்வு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. "6809" என்னும் எண்ணில் நூறாமிடத்து இலக்கம் பின்வருவனவற்றில் எது?
 1)800 2)6 3)8 4)600

2. பின்வரும் எண் சட்டத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள மிகச் சரியான எண்




 1)235 2)2035
 3)2350 4)2305


3. "1000" என்னும் எண்ணில் முந்திய பிந்திய எண்கள் முறையே பின்வருவனவற்றில் எது?
 1)9999,10001 2)999,1001 3)9099,10001 4)999,10001

4. ஒரு பெட்டியில் 659 மாம்பழங்கள் இருந்தன. அந்தப் பெட்டியில் மேலதிகமாக 348 மாம்பழங்கள் போடப்பட்டன. பின்னர் அதில் 475 பழங்கள் விற்கப்பட்டன. தற்போது பெட்டியில் உள்ள பழங்களின் எண்ணிக்கை யாது?
 1)148 2)823 3)127 4)532

5. ஒரு கம்பித்துண்டொன்றின் நீளம் 67 cm இன்னொரு கம்பித் துண்டொன்றின் நீளம் 33 cm. இரண்டினதும் நீளம்
 1)100m 2)1m 3)1cm 4)10m


6. 6x ☐ = ☐ ÷ 9= 8 இப்பெட்டிகளில் வரவேண்டிய இலக்கங்கள் முறையே
 1)8,72 2)12,96 3)12,72 4)11,108

7. இவ் வட்டத்தில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்வருவனவற்றுள் காட்டும் பின்னம் யாது?



 1)2/4 2)2/5 3)1/8 4)1/4

8. அருகிலுள்ள சதுரமுகியின் முகங்களின் எண்ணிக்கை



 1)8 2)6
 3)12 4)7

9. 2 1/4 Kg தேயிலையை வாங்கிய ஒருவர் அதை 50g பக்கற்றுக்களாகத் தயாரித்தார். அவர் தயாரித்த பக்கற்றுக்களின் எண்ணிக்கை யாது?
 1)45 2)15 3)25 4)50

10. ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது என்பதை இலக்கத்தில் எழுதினால்
 1)999 2)9099 3)9909 4)9009


11. 2 3/4 m ஐ cm (சென்ரிமீற்றரில்) எழுதினால் வருவது
 1)243cm 2)2750cm 3)2075cm 4)275cm

12. 5Kg 50g கிராமை (g) எழுதினால் வருவது
 1)550g 2)5500g 3)5050g 4)5005g

13. ஒரு பெரிய பாத்திரத்தில் 5l பானத்தை ஊற்றமுடியும். 200 Ml பாத்திரம் ஒன்றினால் நீர் எடுத்து அந்தப் பெரிய பாத்திரத்தினுள் ஊற்றி நிரப்ப எத்தனை தடவை ஊற்ற வேண்டும்.
 1)20 2)30 3)40 4)25

14. '1/2' இப் பின்னத்தை தசம எண்ணில் எழுதினால்
 1)0.2 2)0.1 3)0.5 4)0.6

15. ரூ.1000.00 இல் உள்ள ரூ 20.00 காசுத் தாள்களின் எண்ணிக்கை யாது?
 1)20 2)30
 3)40 4)50



16. இந்தக் கடிகாரம் காட்டும் மிகச் சரியான நேரம்
 1)5.50 2)5.00 3)4.50 5)10.00


17. சாதாரண வருடம் ஒன்றில் மாசி மாதத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை?
 1)28 2)29 3)30 4)31

18. 1l 500ml பாலை இரு பாத்திரங்களில் சரிசமனாகப் பகிரப்பட்டால் ஒரு பாத்திரத்தில் உள்ள பாலின் சரியான அளவு
 1)1l 2)1/2l 3)1/4l 4)3/4l

19. 1289 என்னும் எண்ணில் பெறுமதி கூடிய இலக்கம் பின்வருவனவற்றில் எது?
 1)1 2)2 3)8 4)9

20. 1/4 என்னும் பின்னத்துக்கு சமனான வேறு ஒரு பின்னம் பின்வருவனவற்றில் எது?
 1)3/9 2)2/6 3)2/8 4)1/3

1) குமார், ராஜு, ரமேஷ், ரஞ்சன், நிகால் ஆகிய ஐந்து மீனவர்களும் குறிப்பிட்ட ஒரு நாளில் பிடித்த மீனினது அளவுகளை வரைபு காட்டுகிறது. இதை ஆதாரமாகக்கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.






இங்கே மடிக்கவும்

பயன்படுகிறது என்பதை அறிவதோடு, பல வளங்களைப் பயன் படுத்தும் முறைபற்றி விளக்குக.

1. தற்போது பெருமளவில் பயன்படுத்தப்படும் சக்தி வளங்கள் மூன்று தருக?

2. எமது நாட்டில் மின்சக்திக்கான கேள்வி ஆண்டுதோறும் அதி கரித்துச் செல்வதற்கு ஏதுவான காரணிகள் நான்கைக் குறிப் பிடுக?

3. இலங்கை போன்ற நாடுகளில் மாற்றுச் சக்தி வலுக்களாக சூரிய ஒளி, காற்று போன்றவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை இரண்டை விபரிக்குக?

4. நீரைப் பயன்படுத்துவோர் என்ற வகையில் நீர் வளத்தைப பாது காப்பது தொடர்பாக நீங்கள் பகிஸ்கரிப்புச் செய்யும் முறையை இரு காரணங்கள் மூலம் விளக்குக?

04. எதிர்பார்ப்பு:- அபிவிருத்தியை அளவீடு செய்வது தொடர் பான பிரமாணங்கள் பற்றி அறிவதோடு நாடுகளின் அபிவிருத்தி பற்றி அறிவர்.

1. ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளக்கப் பயன்படும் நவீன அளவை முறைகள் மூன்றைத் தருக?

2. அபிவிருத்தியடைந்த நாடுகளில் மட்டும் பொதுவாகக் காணப் படும் சில பண்புகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடான இலங் கையிலும் காணப்படுகின்றன. அத்தகைய பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக?

3. நகரங்களில் வாழும் மக்கள் தொகையின் வீதம் அதிகரிப்ப தற்கு ஏதுவாகவுள்ள இரண்டு காரணிகளைச் சுருக்கமாக விளக் குக?

4. கைத்தொழில் அபிவிருத்தியானது சூழல் மாசடைதலுடன் எவ் வாறு தொடர்புற்றிருக்கிறது என்பதனை இரு காரணிகளின் உத வியுடன் விளக்குக?

05. எதிர்பார்ப்பு:- சர்வதேச வர்த்தகம் தொடர்பாகவும், அதில் செல்வாக்குப் பெறும் முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் மாண வர்கள் தேவையான தகவல்களை வெளிப்படுத்துவர்

1. சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய சர்வதேச தாப னங்கள் மூன்றினையும் குறிப்பிடுக?

2. நாடுகளுக்கு இடையில் பொருட்களைப் பரிவர்த்தனை செய்வது அவசியமானது என்பதற்கு நான்கு காரணிகளைத் தருக?

3. சர்வதேச வர்த்தகம் தொடர்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளும்பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இரண்டு காரணிகளின் உதவியுடன் விளக்குக?

4. சில நாடுகளுக்குப் பிரதிகூலமாயுள்ளபோதும், தற்போது நாடு கள் நிலை பெற்றிருப்பதற்குச் சர்வதேச வர்த்தகம் அவசியமான தாகும். இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக?

06. எதிர்பார்ப்பு:- ஐக்கிய நாடுகள் அமையத்தின் முக்கியத் துவத்தைத் தெரிந்திருப்பதுடன் அங்குள்ள அமைப்புக்களின் செயற்பாடுகளை விளக்குக?

1. ஐக்கிய நாடுகள் அமையத்தில் அங்கத்துவம் வகிக்கும் உரிமை எவ்வகையில் பெறப்படும்?

2. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் நான் கைக் குறிப்பிடுக?

3. இலங்கையில் யுனேஸ்கோ நிறுவனம் மேற்கொண்டுள்ள சேவை கள் 2 ஐ விபரிக்குக?

4. ஐக்கிய நாடுகள் அமையம் உலக சமாதானத்தை நிலைநாட் டப்பட பல நாடுகளிலும் பல சந்தர்ப்பங்களில் ஈடுபட்டுள்ளது. அவ்வாறான செயற்பாடுகள், சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

7. எதிர்பார்ப்பு : பண்டைக்கால வியாபாரத் தொடர்புகளையும், அவர்கள் பயன்படுத்திய துறைமுகங்களையும் விளக்குக?



1. அருகில் தரப்பட்டுள்ள படத்தில் A,B,C,D எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளவை புராதன துறைமுகங்களாகும். இவற்றின் புராதன பெயர்களை A,B,C,D எனும் ஒழுங்கில் எழுதுக?

2. பண்டைக்காலத்தில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்தன. அவற்றுள் குடிவரவுக்கு இரண்டு சம்பவங்களும் திருமண உறவுக்கு இரண்டு சம்பவங்க ளையும் தருக?

3. இலங்கையுடன் வேறு நாடுகளின் தொடர்புகள் காணப்பட்ட தால் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்களை இரண்டு உதாரணங் கள் மூலம் விளக்குக?

4. இலங்கைக்கும் வேறு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகத் தொடர் புகளில் ஈடுபட்ட இரு நாடுகளைக் குறிப்பிட்டு, அவர்கள் பரிமாறிக் கொண்ட பொருட்களை அட்டவணைப்படுத்துக?

8. எதிர்பார்ப்பு : சனத்தொகை என்றால் என்ன என்பதை அறிவ தோடு அதனால் ஏற்படும் விளைவுகளையும் தெரிந்து கொளவர்.

1. ஒரு நாட்டின் சனத்தொகையில் மாற்றம் ஏற்படுவதை தீர்மா னிக்கும் காரணங்கள் 3 தருக?

2. விரைவான சனத்தொகைப் பெருக்கத்தினால் எவ்வாறு சூழல் மாசடைகிறது என்பதற்கு 4 காரணிகளைத் தருக?

3. பிரித்தானிய யுகத்தின் இறுதிப் பகுதியின்போது இலங்கையின் குடித்தொகைப் பரம்பலின் இயல்புகள் இரண்டினை விளக்குக?

4. தங்கியிருப்போரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கும்போது அவர்களுக்காக வழங்கப்படவேண்டிய நலன்புரி சேவைகள் 2 ஐ குறிப்பிட்டு விபரிக்குக?

9. எதிர்பார்ப்பு :- மாணவர்கள் இலங்கையின் பண்டைக் காலத்தில் பயன்படுத்திய தொழில்நுட்பத்திறனையும் தொடர்பாட லையும் அது மக்களின் மேம்பாட்டுக்கு உதவியமை பற்றியும் வெளிப்படுத்துவர்.

1. உலகம் ஒரு கிராமமாக மாறியுள்ளமைக்கு காரணம் தொழில் நுட்பத்திறன் ஆகும். இலங்கையில் தற்போது பாவனையிலுள்ள தொடர்பாடல் முறை மூன்று தருக?

2. நீர்ப்பாசனம், போக்குவரத்து ஆகிய துறைகளில் உயர்தொழில் நுட்பவியல் காணப்பட்டது என்பதற்கு நான்கு உதாரணம் தருக?

3. பண்டைக்கால தொழில்நுட்பத்திற்கும், நவீனகால தொழில் நுட்பத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் 2 ஐக் குறிப்பிட்டு விபரிக்குக?

4. துரிதமாக செய்திகளை பரிமாறிக்கொள்ள முடிகின்றமை அபி விருத்திக்கு துணைசெய்யும் விதத்தை இரண்டு காரணங்கள் மூலம் விபரிக்குக?

10 எதிர்பார்ப்பு :- மாணவர்கள் மலையக இராட்சியம் தொடர்பான இயற்கை அமைப்பையும் அதனுடைய சிறப்பு அம்சங்களையும் விளக்குவர்.

1. இலங்கையில் ஐரோப்பிய ஆதிக்கம் தொடங்கிய காலத்தில் கண்டி இராட்சியத்தை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் மூவரைக் குறிப்பிடுக?

2. விக்கிரம இராசசிங்கன் கண்டி மக்கள் மிகுந்த வெறுப்புக்கு ஏன் உள்ளானான் என்பதற்கு நான்கு காரணிகளைக் குறிப்பிடுக?

3. கண்டி யுகத்தில் கிராமங்களில் வாழ்ந்த மக்களில் தமது நாளாந்த வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்த முறையினை விளக்குக?

4. கண்டி இராச்சியத்தின் கலாச்சாரத்துக்கு உதாரணம் தந்து விளக்குக?

நா.விஜயகுமார் (அன்ரன்)
மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

1. கூடுதலான மீனைப் பிடித்தவர் யார்?

2. குறைவான மீனைப் பிடித்தவருக்கும், கூடுதலான மீனைப் பிடித்தவருக்கும் இடையிலான மீனின் அளவு வித்தியாசம் எவ்வளவு?

3. சமனான அளவு மீனைப் பிடித்த இருவரும் யாவர்?

4. மீனின் அளவுகளை குறைந்ததில் இருந்து கூடிச் செல்லும் வகையில் ஏறுவரிசைப்படுத்துக?

5. மீனின் அளவுகளைக் கூடியதிலிருந்து குறைந்து செல்லும் வகையில் மீனைப் பிடித்தவர்களின் பெயர்களை இறங்குவரிசைப் படுத்துக.

6. ஐந்து பேரும் பிடித்த மொத்த மீனின் அளவு யாது?

7. 1Kg மீனை ரூ.50.00 படி விற்றால், ராஜு பிடித்த மீனினால் கிடைக்கும் வருமானம் யாது?

8. நிகால் பிடித்த மீன்களை நான்கு பேருக்கு சமனாகப் பிரித்து விற்கப்பட்டது. அதில் ஒருவருக்குக் கிடைத்திருக்கக்கூடிய மீனின் அளவைக் காண்க?

9. XIX, XVIII, XXV ஆகிய உரோமன் இலக்கங்களில் காட்டப்படும் எண்களை முறையே எழுதுக.

10. அடுத்து வரும் எண்களைக் காண்க.
 i. 7,8,10,13,17 ..........
 ii. 50, 40, 31, 23, 16, ..........
 iii. 6, 12, 18, 24, 30, ..........

11. 100g பருப்பின் விலை ரூ.4.50 ஆகும். 1 Kg பருப்பின் விலை யாது?

12. எனது வயதைப் போன்று நான்கு மடங்கு வயதிலும் 5 குறைவு எனது அம்மாவின் வயது ஆகும். எனது வயது 9 ஆகும். அம்மாவின் வயது யாது?

13. இரண்டு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை 70 ஆகும். ஒரு குவியலில் மற்றைய குவியலிலும் 10 கூடுதலாக உள்ளது. கூடுதலாக உள்ள குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

14. 8 பென்சில்களின் விலை ரூ.60.00 ஆகும். ஒரு பென்சிலின் விலை யாது?

15. 4,3,2, 6 ஆகிய இலக்கங்களிலிருந்து உம்மால் ஆகக்கூடிய மிகப் பெரிய, சிறிய எண்களை எழுதுக?

**ஜெ.விக்ரர் - மானிப்பாய்**

# தமிழ்

கீழே உள்ள பாடலை வாசித்து அதன் கீழ் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

மலையில் வந்து முகிள்கள் கூட
வண்ண மயிலும் ஆடுது
அழகுத் தோகை விரித்து நின்றே
ஆனந்தமாய் ஆடுது

கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாழம் போடுது
கொப்புக் கொப்பாய் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது

வானம்பாடி மயிலின் கூத்தை
வாள்த்திப் பாட்டு பாடுது
வண்ணக் கிளியும் வந்திருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது

கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தைப் பார்த்துக் கலிக்கிறான்
குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு
குதித்துக் குதித்து நடிக்கிறாள்.

1. மேலே உள்ள ஒவ்வொரு பாடல் பகுதிகளிலும் நான்கு சொற்களில் எழுத்துப் பிழைகள் உள்ளன. அந்த நான்கு சொற்களையும் இனம் கண்டு திருத்தி எழுதுக.

2. வண்ணமயில் எப்போது ஆடுகிறது?

3. குரங்கு எவ்வாறு தாளம் போடுகிறது?

4. மயிலின் கூத்தைப் பார்த்து இரசிப்பது எது?

5. மயிலின் கூத்தைக் கண்டு குறத்தி யாது செய்கிறாள்?

6. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.
 1) மலை : ..........
 2) அழகு : ..........
 3) குரங்கு : ..........
 4) ஆனந்தம் : ..........
 5) இருந்து : ..........

7. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொல் தருக.
 1) வாழ்த்துதல் : ..........
 2) வானம் : ..........
 3) விரித்து : ..........
 4) ஆனந்தம் : ..........

8. இந்தப் பாடலில் வந்துள்ள அடுக்குத் தொடர் ஒன்றை எழுதுக..........

9. இடப் பெயர் ஒன்றை எழுதுக

10. நிகழ்கால பெண்பால் வினைமுற்று யாது

11. குறத்தி என்பதன் ஆண்பாற் சொல் யாது

12. இதிலுள்ள உயர்திணைப் பெயர்ச் சொல் ஒன்று எழுதுக.

13. பெயராகவும் வினையாகவும் வரத்தக்க சொல் ஒன்று,



இங்கே மடிக்கவும்

எழுதுக. ........................................................

14. வந்திருந்து என்பதை பிரித்து எழுதுக.

........................................................

15. பின்வரும் வினாக்களுக்குரிய மிகச் சரியான விடைகளை எழுதுக

16. காகம் கரைவது போன்று மயில்

........................................................

17. சிங்கம் கர்ச்சிப்பது போன்று யானை

........................................................

18. கள்வனைக் கண்ட நாய் துரத்தியது இதில் வந்துள்ள எழுவாய்.

19. ........................................ ஒரு சோறு பதம்.

20. குறைகுடம் தளும்பும் ........................................

21. ........... பெய்ததால் நாட்டில்.................. நீங்கியது

22. தினமும்...... யில் படித்து....... யில் விளையாடுதல் நன்று.

23. காகத்தின் கூட்டில் ......................... முட்டை இடும்.

24. ............... சூரியன் உதித்து ............ சூரியன் மறையும்.

25. எல்லாச் செல்வங்களையும் விட உயர்ந்த செல்வம் எது?

........................................................

26. நகைச்சுவைக் கதைகள் மூலம் புகழ் பெற்ற இருவரின் பெயர்களை எழுதுக ........................................

27. முல்லைக் கொடிக்கு தேர்கொடுத்த வள்ளல் யார்?

........................................................

28. விமானத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவர்கள் யார்?

........................................................

29. இலங்கையில் மிகப் பெரிய தாவரவியல் பூங்கா எங்குள்ளது?

........................................................

30. பின்வருவனவற்றை இணைக்குக.

| | |
|---|---|
| பின்னவெல | பாரதியார் |
| லூல்கந்துர | காசோலை |
| தபாற்கந்தோர் | சோக்கிரட்டீஸ் |
| வங்கி | தேயிலை |
| சிந்தனையாளர் | யானைகள் |
| புலவர் | மணியோடர் |

31. பொருத்தமான சொல்லின் கீழ் கீறிடுக.

1. கமல் பாடசாலைக்குச் (சென்றான், சென்றாள்)
2. (நான், நாங்கள்) தண்ணீர் குடித்தோம்.
3. யானை (பலம், பழம்) உள்ள மிருகம் ஆகும்.
4. நாய் கள்வனைக் கண்டு (குறைத்தது, குரைத்தது)
5. பாம்பு பூனையைக் கண்டு (சீறியது, சீரியது)

32. பொருத்தமற்ற சொல்லின் கீழ் கீறிடுக.

1. பூமி, அவனி, நாடு, பார், உலகம்
2. மன்னன், வேந்தன், கோன், அரசன், குரு
3. அடவி, குன்று, வனம், காடு, கானகம்.
4. நடி, ஆடி, தை பார், மடி

33. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக.

கலை :........................................................
களை :........................................................
அலை :........................................................
அழை :........................................................
வளி :........................................................
வலி :........................................................
வழி :........................................................

# க.பொ.த. (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள்

## சமூகக் கல்வியும், வரலாறும்

**பகுதி II**

01 அ.

1. a. சமய கலாசார மறுமலர்ச்சிக்குத் துணைபுரிந்த மூன்று பெரியார்களை எழுதுக?

b. இலங்கையில் பின்பற்றப்படுகின்ற மதங்களைக் குறிப்பிட்டு, இம் மதங்களின் வளர்ச்சிக்குக் காரணமானவர்களைக் குறிப்பிடுக?

c. புராதன காலத்தின் கலைப் படைப்புக்கு மூன்று உதாரணம் தருக?

d. பொலனறுவைக்கால அநுராதபுரக்கால சந்திரவட்டக் கல்லுக்கு இடையிலான வேறுபாடு யாது?

2. a. புராதன காலத்தில் நீர்ப்பாசனத்தின் பொற்காலம் எனக் கூறப்பட்ட பகுதி யாது?

b. வசப மன்னனால் அமைக்கப்பட்ட குளம், கால்வாய்களைக் குறிப்பிடுக?

c. ஆரம்பக் குடியேற்றங்களுக்குப் பயன்படுத்திய ஆறுகள் மூன்றை எழுதுக?

d. துரித மகாவலித் திட்டத்தின் நோக்கம் இரண்டைத் தருக?

03. a. கல்லோயாப் பள்ளத்தாக்கிற்கு அருகே ஏற்படுத்தப்பட்ட ஆரம்ப ஆரிய குடியேற்றம் ........................................ என்பதாகும்.

b. 1ம் உலகமகாயுத்தம் ஏற்படுவதற்கான உடனடிக் காரணம் ........................................ ஆகும்.

c. அரசியல் வலுச் சமநிலையைத் தாபிப்பதற்கு திலோக சுந்தரி என்ற பெயருடைய கலிங்க இளவரசியை மணம் செய்த மன்னன் ........................................ ஆவான்.

d. மனித வர்க்கத்தின் நலனை இலக்காகக்கொண்டு ஆகக்கூடிய நாடுகளை, உறுப்பு நாடுகளாகப் பெற்றுள்ள சர்வதேச மையம் ........................................ ஆகும்.

d. சமாதானம், நிலம், உணவு எனும் சுலோகத்தைப் பயன் படுத்திய புரட்சி ........................................ ஆகும்.

02. எதிர்பார்ப்பு:- மாணவர்கள் காலநிலை பற்றி அறிவதோடு அதனால் ஏற்படும் மாற்றங்களையும் விளைவுகளையும் மதிப்பிடுவார்.

1. இலங்கைக்குக் கிடைக்கும் மழை வீழ்ச்சிகள் மூன்றினையும் குறிப்பிடுக?

2. இலங்கையில் வெப்பநிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக?

3. வெள்ளப்பெருக்கு, மண்சரிவு என்பன ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு, அவற்றை விபரிக்குக?

4. போதுமான அளவு மழையைப் பெறமுடியாத காரணத்தால் எழக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கை இரண்டை விளக்குக?

03. எதிர்பார்ப்பு:- வளங்கள் மனித நடவடிக்கைகளில் பெரிதும்

# வடமராட்சி கிழக்கில் மாவீரர் நாளை சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு!

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை, வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தீபன் தலைமையிலான மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஏற்பாட்டு நிகழ்வில் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம், சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பனை தென்னை வளச் கூட்டுறவுச் சங்கம், விளையாட்டுக் கழக ஒன்றியம், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் வடமராட்சி கிழக்கு துயிலும் இல்லம், வீதிகள், வைத்தியசாலை, பாடசாலைச் சுற்றுப்புறங்கள் என்பன பாடசாலை மாணவர்கள், சங்கப் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழக ஒன்றிய அங்கத்தவர்களால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யும் பணிகள் நடைபெறவிருக்கிறது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வடமராட்சி கிழக்கிலுள்ள மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு, உடுத்துறை மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி மாலை 6.30 மணி தொடக்கம் தேசியத் தலைவரின் பிறந்த நாளையொட்டி, உடுத்துறை மகாவித்தியாலய அரங்கில் நாடகம், நடனம், மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவிருக்கிறது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலிருந்து கொடிகாமம் நவிண்டில், கோப்பாய் மற்றும் வன்னியிலுள்ள துயிலுமில்லங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர் அழைத்துச் செல்லப்படவிருப்பதுடன், அன்றைய தினம் மற்றைய இடங்களிலிருந்து வடமராட்சி கிழக்கு உடுத்துறை துயிலும் இல்லத்துக்கு வருகை தரும் பெற்றோர் கௌவிக்கப்படவிருப்பதுடன் இங்கு தங்கிச்செல்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்படவுள்ளன. (21)

# மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை இன்று வைபவ ரீதியாகத் திறந்துவைப்பு!



மருதங்கேணி ஆதார வைத்தியசாலை இன்று காலை வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது. கடந்தகாலப் போரால் மிகவும் பாதிக்கப்பட்ட இந்த வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கு நிகொட் நிறுவனம் 2 கோடி 30 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

புனரமைக்கப்பட்ட இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு, ஆண் பெண் விடுதிகள், பிரேத அறைகள், கர்ப்பிணிப் பிரிவு மற்றும் வைத்தியர் விடுதிகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வைத்தியசாலைக்கு நிகொட் நிறுவனத்தால் அம்புலன்ஸ் வாகனம் ஒன்றும் வழங்கப்படவுள்ளது. இந்தப் பிரதேச மக்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய இந்த வைத்தியசாலை 2000 ஆண்டு ஏற்பட்ட போர் அனர்த்தம் காரணமாக முற்றாக அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (122)

# வடமராட்சி கிழக்கு பகுதியிலிருந்து புளியங்குளம்வரை பஸ்சேவை!

(மருதங்கேணி)

வடமராட்சிக் கிழக்கு கேவில்-கட்டைக்காடு - புளியங்குளம் வரையான பஸ் சேவையொன்றை வடமராட்சிக்கிழக்கு சிற்றூர்திகள் சேவைச் சங்கத்தினர் இந்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பித்துள்ளனர்.

காலை 7 மணிக்கு கேவில் - கட்டைக்காடு சந்தியிலிருந்து புறப்படும் பயணிகள் பஸ் தாளையடி, புதுக்காடு சந்தி வழியாக பகல் 11 மணிக்கு புளியங்குளம் சென்றடையும், மாலை 2 மணிக்கு வவுனியா புளியங்குளத்திலிருந்து புறப்படும் பஸ் அதே வழியாக மாலை 6.30 மணிக்கு கட்டைக்காடு சந்தியை வந்தடையும்.

வடமராட்சிக் கிழக்கு கிராமங்களிலிருந்தும் மாசார், சோரன்பற்று, இயக்கச்சி கிராமங்களிலிருந்தும் முகமாலைக்குச் சென்று, பஸ் மூலம் வவுனியா, புளியங்குளம் சென்ற பயணிகள், இந்த சேவை ஆரம்பிக்கப்பட்ட பின் முகமாலைக்குச் செல்லாது தங்கள் கிராமங்களிலிருந்தே புளியங்குளத்துக்கான பயணத்தை மேற்கொள்ளமுடிகிறது.

கேவில், கட்டைக்காடு - புளியங்குளம் பிரயாணத்துக்கு ஒரு வழிக் கட்டணமாக ரூபா 125 அறவிடப்படுகிறது எனத் தெரியவருகிறது. (21)




# பூநகர் கல்விக்கோட்ட பாடசாலை மாணவருக்கான பொது அறிவுப்போட்டி

பூநகரி இராணுவ முகாமை 'தவளைப் பாய்ச்சல்' படை நடவடிக்கைமூலம் தகர்த்தெறிந்து, முற்றாகக் கைப்பற்றிய 11 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, பூநகரிக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே பொது அறிவுப் போட்டி ஒன்று மாணவர் அமைப்பால் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கோட்டப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை கல்விகற்கும் மாணவர்கள், இந்தப் பொது அறிவுப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

1993 ஆம் ஆண்டு பூநகரி படை முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதன் 11 ஆவது நினைவு தினம் எதிர்வரும் 13 ஆம் திகதி பூநகரி வாடியடியில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படவுள்ளன. (122)

# வெற்றிலைக்கேணி வெளிச்சவீட்டுக்கு மின்சார வசதி செய்ய ஏற்பாடு!

(மருதங்கேணி)

மருதங்கேணிப் பிரதேசத்தில் உள்ள வெற்றிலைக்கேணியில் அமைந்துள்ள (கோரி) கலங்கரை விளக்கத்துக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இந்தக் கோரிக்கு வெளிச்சம் ஏற்படுத்திக்கொடுக்காமை காரணமாக, இரவு நேரங்களில் கடற்தொழிலுக்குச் செல்லும் கடற்தொழிலாளர்கள் திசை தெரியாமல் சிரமங்களை ஏதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

# ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்!

## தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்

(கிளிநொச்சி)

போரினால் அழிந்துள்ள எமது தேசத்தில் ஒரு ஆரோக்கியமான சமூதாயத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை வெளியிட்ட வைக்கப்பட்ட 'விழி' மருத்துவ இதழின் பொன்மலர் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'விழி' மருத்துவ இதழானது எமது மக்களின் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கப் பெரிதும் உதவிவருகிறது. எமது மக்கள்மீது திணிக்கப்பட்ட போரினாலும், பொருளாதாரத் தடைகளாலும் பல்வேறுபட்ட இன்னல்களை எமது மக்கள் அனுபவித்துவந்தவேளைகளில் வரும் முன் காக்கும் நடவடிக்கைகளை 'விழி' மருத்துவ இதழ் முன்னெடுத்துச் சென்றுள்ளடன், தொடர்ந்தும் செயற்பட்டுவருகிறது.

மக்களுடைய சுகாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் வகையில் மருத்துவ சங்கம் செயற்பட்டுவருகிறது. போரினால் அழியுண்டு பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட எமது தேசத்தில் ஒரு ஆராக்கியமான சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார்

மேற்படி நிகழ்வு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரை தமிழ்ச் சங்கச் செயலாளர் பரமநாதபிள்ளை ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து 'விழி' மருத்துவ இதழின் முதற்பிரதியை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வெளியிட்டு வைக்க திருமதி சயந்தன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து மதிப்பீட்டுரையினை வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் நிகழ்த்தினார். சிறப்புரைகளை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அருண், வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# மருதங்கேணி – ஆழியவளை பிரதான வீதி விரைவில் புனரமைக்கப்படவுள்ளது!

(மருதங்கேணி)

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்திலுள்ள மருதங்கேணி - ஆழியவளை பிரதான வீதி விரைவில் புனரமைக்கப்படவுள்ளது. இந்தவீதி சுமார் 20 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் காணப்படுகிறது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர பிரிவில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக - இந்த வீதியின் இரு பக்கங்களிலுமுள்ள பற்றைகள் பொது மக்களால் சிரமதானம் மூலம் வெட்டி அக்ற்றப்படவுள்ளது (122)

# வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் புதிதாக அரிசி ஆலைகள் திறந்துவைப்பு

(வவுனியா)

வவுனியா - நெடுங்கேணிப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு அரிசி ஆலைகள் திறந்து வைக்கப்பட்டன.

நெடுங்கேணிப் பிரதேசத்தில் மருதோடை, கற்குளம் ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்ட அரிசி ஆலைகளே திறந்துவைக்கப்பட்டன.

சேவா லங்கா நிறுவனமும், நெடுங்கேணி ப.நோ.கூ.சங்கமும் இணைந்து, இந்த அரிசி ஆலைகளை அமைத்துள்ளன. இந்த அரிசி ஆலைகளை வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் திறந்துவைத்தார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### கால்நடைகளுக்கான மருத்துவமனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கான மருத்துவமனை புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

பூநகரிப் பிரதேசத்துக்குரிய கால்நடை மருத்துவமனை, தற்பொழுது ஜெயபுரத்தில் தற்காலிகமாக இயங்கிவருகிறது. இந்த மருத்துவமனை வெகுவிரைவில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் இயங்கவுள்ளது.

### பரிசளிப்பு விழா

கிளிநொச்சி ஜெயபுரம் பாடசாலையின் ஆண்டு விழாவும், 2004 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியமடைந்த மாணவிக்கான பரிசளிப்பு நிகழ்வும் இன்று இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

### மாவீரர் துயிலும் இல்லம் அலங்கரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அலங்கரிக்கப்பட்டது. முழங்காவில் பிரதேச மகளிர் சங்கம், தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் வர்த்தக சங்கம் என்பன இணைந்து இந்த அலங்கரிப்பு வேலைகளை மேற்கொண்டன.

### முன்பள்ளிகள் இயங்குவதில்லை

வவுனியா வடக்கு - புளியங்குளம் தெற்கு, பழைய வாடி, இராமனூர் ஆகிய பகுதிகளில் முன்பள்ளிகள் இல்லாத நிலை காணப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு முன்பள்ளிகள் இயங்கிவந்தன. தற்போது முன்பள்ளிகள் இயங்குவதில்லை. இதனால், இந்தப்பகுதி முன்பள்ளிச் சிறார்கள் தமது ஆரம்பக் கல்வியைப் பெறமுடியாத நிலை காணப்படுகிறது.

# மன்னார் –ஐம்பது வீட்டுத்திட்டம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயநிலை

(மன்னார்)

மன்னார் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் காஞ்சிபுரம் மற்றும் பள்ளிமுனை 50 வீட்டுத்திட்டம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயநிலை தோன்றியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் இராணுவத்தினர் அமைத்துள்ள மண் அணைகள், மற்றும் வடிகால்கள் இல்லாத காரணங்களால் மழை நீர் மக்கள் குடியிருப்புக்களில் தேங்கியிருக்கும் நிலை காணப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் இடம்பெயர்ந்த மக்களுக்கென தொண்டர் நிறுவனங்கள், வீட்டுத்திட்டத்தின் கீழ் அமைந்த வீடுகள், நீர் தேங்கி நிற்கும் இடங்களில் அமைக்கப்பட்டமையால், வீடுகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை காணப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

வாரநோக்கு... - யாழவன்

# இலங்கை மீது இந்தியா காட்டுவது பாசமா? சுயநலத்தின் வெளிப்பாடா?

இலங்கை ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் இந்தியா விஜயம் ஜப்பானின் விசேடதூதர் யசூசி அகாஷி இலங்கை வருகை, நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பதற்கு திட்டம், இலங்கையர் ஒருவர் ஈராக் தீவிரவாதிகளால் கடத்தல் எனப் பல பரபரப்பான சம்பவங்களை கொண்டதாக கடந்த வாரம் கடந்து சென்றுள்ளது.

இவற்றுள்ளே ஜனாதிபதி தலைமையிலான குழுவினரின் விஜயம் இன்று பெரிதாகப் பேசப்படும் விடயமாகவுள்ளது.இந்த விடயத்தின் போது, இந்திய உயர் தலைவர்கள் பலரையும் சந்திதது்க் கலந்துரையாடியுள்ள ஜனாதிபதி, இலஙகை விவகாரம் தொடர்பாக பல முக்கிய விடயங்களிலும், அத்தலைவர்களைத் தலையிட வைப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். இதன்படியாக இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளது.



என்றுமே இறால் போட்டு சுறாப் பிடிக்கும் திறமைமிக்க இந்தியா இயன்றவரை இலங்கையின் பாதுகாப்பிலே அதீதமான அக்கறையை எடுத்துக் கொண்டு செயற்பட்டு வருகிறது. பாதுகாப்பு விடயங்களுடன் சமாந்தரமாக அபிவிருத்தித் திட்டங்களிலும் தாம் அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டமுனையும் இந்தியா அதற்காக பலகோடி நிதியுதவியையும் அளித்துள்ளது. இதனால் திருகோணமலை, அநுராதபுரம் நெடுஞ்சாலைக்கு ராஜீவ காந்தி நல்லெண்ண நெடுஞ்சாலை எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது இலங்கையில் இந்தியாவின் செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கு டன் இடப்பட்ட பெயராகும்.

திருகோணமலையே வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று அநுராதபுரம் இலங்கையின் கலாசார தலை நகரமாகப் பேணப்பட்டு வருகிறது. இவ்வீரு பிரதான நகரங்களும் இலங்கையிலுள்ள இரு வேறுபட்ட மொழி, மத, இன, பண்பாட்டு அடையாளங்களைக் கொண்ட மக்கள் கூட்டத்தினுடைய பிர்தான இடங்களாகும். இந்நிலையில் இந்த நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலைக்கு இந்தியாவின் முன்னாள் பிரதமரொருவரின் பெயரை இடுவதன் மூலம், தமிழ் - சிங்கள இனங்களிடையே இணைப்பு பாலமாக இருப்பதற்கு இந்தியா விரும்புகிறதா? என எண்ணத் தோன்றுகிறது. இந்தக் கருத்தானது நூற்றுக்கு பத்து வீதமே நம்பக்கூடியதாகவுள்ளது. ஏனெனில், இந்தியா ஈழத்தமிழர்கள் தொடர்பாக தற்போது பின்பற்றி வரும் நிலைப்பாடானது, பரிதாபத்துக்குரியதாகவே உள்ளது.

சில சந்தர்ப்பங்களில் மாறாக, இந்தியா ஈழத்தமிழர்கள் மீது தொடர்ந்து காட்டிவரும் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாக இந்த வீதிப் பெயர் சூட்டு படலம் நிகழ்ந்து இருக்கவும் வாய்ப்புள்ளது. ஏனெனில், விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொணட பேச்சுவார்த்தையொன்றை எதிர்பார்த்துள்ள வேளையில், அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் முகமாக பேச்சுக்கள் நடைபெற்று இடைக்கால நிர்வாகசபையொன்று அமைக்கப்படுமாகவிருந்தால், அது நிச்சயமாக தமிழ் மக்களுடைய தனித்துவத்தை பேணுவதிலே அதீத கவனமெடுக்கும் இதனால் அந்த தனிதத்துவம் பேணலிலே ஒரு சிறு கீறலை ஏறபடுத்தும் முகமாக, தமிழர் தாயகத் தலைநகர் திருகோணமலையிலே ராஜீவ்காந்தியின் பெயரிலே நெடுஞ்சாலையொன்றை அமைத்துள்ளனர் எனவும் கருத முடியும்.

காலப் போக்கிலே, வரலாறுகளைத் திரித்து எழுதியே பழகிப்போன பௌத்த பழமைவாதிகள், இலங்கையில் சமாதானம் மலர இந்தியாவே அதிகம் பாடுபட்டது. அதன் நினைவாகவே அநுராதபுரம், திருகோணமலை வீதிக்கு ராஜீவ்காந்தியின் பெயர் சூட்டப்பட்டது என எழுதிவிடுவார்கள். ஏனெனில் அவர்கள் இராவணனையே சிங்கள மன்னன் என விதண்டா வாதம் புரியும் விற்பன்னர்களாச்சே! ராஜீவ்காந்தி நெடுஞசாலை, ராஜவ் காநதியைப் போல் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்காமல், சிங்கள, தமிழ் மக்களை இணைக்கும் உறவுப் பாலமாகத் திகழ வேணடும் என்பதே அனைவரது எதிர்பார்ப்புமாகும். ராஜவ் காந்தி செய்த பாவங்களுக்கு பழி துடைபபது போலவே அவரது பெயர் தற்போது தமிழ் மக்களுடைய காலகளிலே மிதிபடப் போகின்றதோ தெரியவில்லை!

இது இவ்வாறு இருக்க, இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிலை உருவாகிவிட்டது. இதனால் இலங்கையை விட இந்தியாவுக்கே அதிக நன்மை இருந்தாலும், இநதிய இராணுவத் தளபதியோ, இலங்கைக்கே அதிக நன்மையெனக் கதை அளக்கிறார். அயல் நாடான இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைப் பகிரங்கமாக செய்து கொண்டால், வேறு நாடுகளிலிருந்து பாதுகாப்பு தொடர்பான உதவிகளைப் பெறமுடியாது. இதனால் அமெரிக்கா, இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் உறவுகளை முறித்துக் கொள்ள வேண்டி வரும். இதனால் இந்த நாடுகளிலிருந்து கிடைக்கும் அபிவிருத்திப் பணிகளையும் பெறமுடியாத நிலையும் உருவாகலாம்.

ஏனெனில், எந்த நாடும் இன்னொரு நாட்டின் மீது தனது பிடியை, பாதுகாப்பு ஒப்பந்தங்கள், அவை சார்ந்த உதவிகள் என்பன மூலமாகவே பேணிவரு கின்றன. இதனாலேயே இந்தியா கூட, பாதுகாப்பு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும் நிலை தோனறிய பின்னரே, அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ளது. இந்த யதார்த்த நிலை காரணமாக இலங்கை பொருளாதார நெருக்கடிகளையும் இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தினூடாக எதிர்கொள்ள வேண்டியேற்படும். இது தேவைதானா?

இந்த நிலையில் ஜப்பானின் விசேடதூதுவர் யசூசி அகாஷியை சந்தித்த ஜனாதிபதி, அரசு இடைக்கால நிர்வாக சபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு பேசுவதற்குத் தயார். எனவே புலிகளை மண்டும் பேச்சுவார்த்தைக்கு திருமபச் சொல்லுங்கள் எனத் தெரிவித்துள்ளார். அகாஷியும் இந்தச் செய்தியைக் காவிக்கொண்டு விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்புக்கு பின் விடுதலைப் புலிகளின் தலைமை, தமது தெளிவான முடிவெடுக்கும் சிந்தனை யாற்றலைப் பயன்படுத்தி, ஜனாதிபதி மேற்கண்ட கருத்தை நோர்வேயினூடாக சொல்லி அனுப்பினால் பேச்சுவார்த்தைக்கு வர முடியுமெனத் தெரிவித்துள்ளது.

இந்த விடயமானது, விடுதலைப் புலிகள் எவ்வளவு தூரம் சமாதானப் பாதையைத் தெளிவாக புரிந்து கொண்டு பயணித்து வருகிறார்கள் என்பது புலனாகின்றது. என்றுமே சமாதானத்தைச் சாட்டாக வைத்து சர்வதேச நாடுகள் வழங்கவுள்ள நிதியுதவியைப் பெறுவதிலேயே கரிசனையாகவுள்ள ஜனாதிபதி தரப்பு, இப்படியான சில கசமுசாக்களை விடவேண்டிய நிலையிலேயேயுள்ளனர். ஏனெனில், சமாதானப் பேச்சுவார்ததைகள் ஆரம்பிக்கப்பட்டாலொழிய வேறு எந்த விதத்திலும் சர்வதேச நிதியுதவி இலங்கைக்கு வழங்கப்படமாட்டாது என சம்பந்தப்பட்ட நாடுகள் தெரிவித்துவிட்டன. எனவே இந்நாடுகளை திருப்திப் படுத்தியோ அல்லது ஏதாவது விதத்தில் ஏமாற்றியோ இந்த நிதியுதவியை பெறத்திட்டமிடுகிறார் சந்திரிகா. இதனாலேயே முக்கிய சர்வதேசப் பிரதிநிதியான அகாஷியிடம் இடைக்கால நிர்வாக அடிப்படையிலே பேசத் தயார். பேச்சுவார்த்தைகள் விரைவிலே ஆரம்பமாகப் போகின்றன. எனவே பணத்தைத் தாருங்கள் எனக் கெஞ்சியுள்ளார். இதனை நம்பிய அகாஷியும் விடுதலைப்புலிகளிடம் இந்தச் செய்தியைத் தெரிவித்துள்ளார்.



ஆனால் ஜனாதிபதி விடயமாக என்றுமே கவனமாகவுள்ள புலிகள், இந்தக் கருத்து வெளியிடலையும் கவனமாகவே கையாள வேண்டுமென எண்ணுகின்றனர். ஏனெனில், ஜனாதிபதி காலை ஒன்று, மாலை ஒன்று, மதிய மொன்று என கருத்துக்களை மாறிமாறி வெளிவிடுபவர். அது மட்டு மன்றி சொன்ன கருத்தையும் செய்த செயலையுமே தான் சொல்லவில்லை, செய்யவிலலை என விவாதிப்பவர். ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் எடுக்கும் விடயத்திலேயே குளறுபடிகளை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ஜப்பானிடம் இவ்வாறு கூறிவிட்டு பின் தான் அவ்வாறு எதுவுமே கூறவில்லையென விவாதிபபார். இதனாலேயே நோர்வே அனுசரணையாளர்களினூடாக இந்த விடயத்தை அணுக புலிகள் எண்ணுகிறார்கள். இது அவர்களின் விவேகத்துக்கு வலுச்சேர்ப்பதாகவுள்ளது.

சர்வதேசமும் ஜனாதிபதியின இரட்டைவேடதாரித்தனத்தைப் புரிந்து கொண்டு நிதியுதவி அளிககும் விடயத்திலே கவனமாக காயகளை நகர்த்த வேண்டும். வேண்டுமாகவிருந்தால் பேச்சுவார்த்தைகள் உரிய கட்டங்களைத் தாணடி வெற்றியை அடையுமென தெரிந்தாலே நிதியுதவி வழங்க முடியுமென நிபந்தனை விதிச்க வேண்டும். இந்த நிபந்தனையே இலஙகையின் விதியை மாற்றி எழுதும் வல்லமைமிக்கதாக இருக்கலாம். இதனை சர்வதேசம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

> **சர்வதேசமும் ஜனாதிபதியின் இரட்டைவேடதாரித் தனத்தைப் புரிந்து கொண்டு நிதியுதவி அளிககும் விடயத்திலே கவனமாக காய்களை நகர்த்த வேண்டும். வேண்டுமாகவிருந்தால் பேச்சு வார்த்தைகள் உரிய கட்டங்களைத் தாண்டி வெற்றியை அடையுமென தெரிந்தாலே நிதியுதவி வழங்க முடியுமென நிபந்தனை விதிக்க வேண்டும். இந்த நிபந்தனையே இலஙகையின் விதியை மாற்றி எழுதும் வல்லமைமிக்கதாக இருக்கலாம். இதனை சர்வதேசம் கவனத்திற்கொள்ள வேண்டும்.**

இல்லாவிடின் பேச்சுக்களை ஆரமித்து, நிதியுதவியைப் பெறறு விட்டு, பின்னர் இடைநடுவிலே பேச்சுவார்த்தையை முறிதது்க் கொண்டு வடக்கு - கிழக்கு புனாவாழ்வு புனரமைப்புக்கென வழங்கப்பட்ட நிதியை, தெற்கின் தேவை யற்ற அபிவிருத்திக்கு செலவழிக்கவும் சந்திரிகா திட்டமிடுவார். அத்துடன் 2006 இலாயினும் சரி 2005 இலாயினும் சரி ஜனாதிபதி தேர்தலை நடாத்த வேண்டுமாக விருநதால் பெருமளவு நிதி தேவைபபடும். அதற்கு கடன்பட வேண்டியேற்படும். அதனையும் இந்த நிதியுதவியைப் பாவித்துச் சரிப்படுத்திக் கொள்ளலாம் எனவும் சந்திரிகா தரப்பு திட்டங்களை வகுக்கலாம். எனவே நிதியுதவி விடயம் தொடர்பாக உரிய கவனமெடுக்கப் படல் வேண்டியது அவசியமாகும்.

ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சுகளும் இணைந்து இந்திய சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள இந்த வேளையிலே ஈராக் தீவிரவாதிகளால் இலங்கையைச் சேர்ந்த சாரதியான தினேஸ் தர்மேந்திரா எனும் தமிழர் கடத்தப்பட்டுள்ளார். இவரது விடுதலை தொடர்பாக எந்த விதமான பிரயோசமான நகர்வுகளையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை. இந்த விடயம் தொடர்பானவற்றை பிரதி வெளிவிவகார அமைச்சரே கையாண்டு வருகிறார். வெளிவிவகார அமைச்சரோ இது பற்றி எதுவுமே சிந்திக்காமல் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

சிலவேளைகளில் கடத்தப் பட்ட இலங்கையர் சிங்களவராக இருந்தால் இன்று நிலைமையே வேறாகவிருக்கும். இவரது கடத்தலைப் பயன்படுத்தியே ஆட்சியை கவிழ்த்திருப்பார்கள். வீதிக்கு மககளை இறக்கியிருப்பார்கள். சாதாரணமாக விடுதலைப்புலிகளால் இரு ஊர்காவற் படையினர் கைது செய்யப்பட்ட போது நிகழ்ந்த அமர்க்களங்களை அனைவரும் அறிவோம். அப்போது ஜே.வி.பி. ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகள் போட்ட எதிர்ப்புக்களையும் அனைவரும் அறிவர். ஆனால் இன்று இந்தக் கட்சிகள் மௌனமாகவுள்ளன. சிரச்சேதம் செய்யுமளவுக்குக் கொடுமையான கும்பலொன்றினால் இலங்கையொருவர் கடத்தப்பட்டுள்ளார். எனவே இது தொடர்பான பிரதிபலிப்பு எவ்வளவு கனதியாக இருக்க வேண்டும். ஆனால் பாவம் தினேஸ் தாமேந்திரா! தமிழராகப் பிறந்து விட்டாரே! இதனாலே தமிழர் ஒருவரே வெளிவிவகார அமைச்சராகவுள்ள போதும் கஸ்டப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார்.

ஜே.வி.பி.யோ, ஐக்கிய தேசியக் கட்சியோ கட்சி சார்பாக இந்தக் கடத்தல் தொடர்பாக உரிய கவனமெடுக்கவில்லை. தனித்தனியாக சில அரசியற்தலைவர்கள் இந்தக் கடத்தலைத் தமது அரசியலுக்காக பயன்படுத்துவதற்காக சில சர்வதேச அமைப்புக்களுக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளனர். இயல்பாகவே தினேஸ் தர்மேந் திரா விடுவிக்கப்பட்டாலும் தாம் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாகவே அவர் விடுவிக்கப்பட்டார் என வாதிப்பதே இத்தகையோரின் குறிக்கோளாகும். எப்படியாயினும் இன்று தேவையாகவுள்ளது, தினேஸ் தர்மேந்திராவின் விடுதலையே. அவரை நம்பியுள்ள குடும்பத்துக்கு அரசு பதில்சொல்ல வேண டியுள்ளது. பாவம் ஏழைகளின் கண்ணீரை அரசியலாக்க எவரும் முனைய வேண்டாம்.

தமக்குச் சாதகமாகவே அனைததையும் திருப்ப முயலும் அரசு அதற்கான முயற்சிகளிலேயே தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இந்தப் போக்கை சமாதானப் பேச்சுவார்த்தைகளிலே தாராளமாக காணக் கூடியதாகவுள்ளது. இந்த நிலையிலே மாற்றம் ஏற்படுகின்ற போதே, சமாதானப் பேச்சுக்களும் சாதகமான நிலையை எட்டும். இது சாத்தியமாகுமா?....!

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கொடுப்பார் இலானுங் கெடும்.
திருக்குறள்

# நமது நோக்கு

## அழுத்தங்களுள் ஜனாதிபதியும், அரசும்; சமாதான முயற்சிகள் சாத்தியமாகுமா?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வொன்றைக் காண்பதற்கு, நின்றுபோன பேச்சுவார்த்தை நகர்வுகளை மீண்டும் தொடரவைக்கும் நோக்குடன் பல்வேறு முயற்சிகள் கடந்த சில மாதங்களாக பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டபோதிலும் எந்தவிதமான அனுகூலமான பலன்களும் ஏற்படாது அனைத்தும் இழுபறி நிலையிலேயே தொடர்ந்தும் இருந்துவருகின்றமை தெரிந்த விடயமேயாகும்.

முரண்பாடான கருத்து நிலைகளில் தாக்கம் காரணமாக அரசின் உட்கட்சிகளிடையேயான சமாதானம் குறித்து எந்த விதமான தீர்க்கமான முடிவையும் ஜனாதிபதியால் எடுக்க முடியாத சூழலில், சமாதானத்தைத் தொடரும்படியும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும்படியும் அரசுக்கு அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக ஜனாதிபதி ஒரு நெருக்கடியான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார் என்பதும் உண்மையே...!

ஆனாலும், இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை விட்ட இடத்தில் இருந்து அதாவது விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபைக்கான கோரிக்கையில் இருந்து ஆரம்பிக்குமாறு பல்வேறு பொது அமைப்புகள் மற்றும் சர்வதேச நாடுகளின் ராஜதந்திரக் குழுக்கள் முன்வைத்த வேண்டுகோள்கள் அனைத்தும் ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளவும், நிராகரிக்கவும் முடியாத நிலையில் அரசின் சார்பில் மாற்றுயோசனைகளை முன்வைக்க அவர் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது வெற்றியளிக்கமுடியாது போனதில் ஜனாதிபதியும், அரசும் புதிய நெருக்குதல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தற்போது தள்ளப்பட்டுள்ளனர்.

சமாதானப் பேச்சுக்களைக் குழப்ப அல்லது காலம் கடத்தி பேய்க்காட்ட ஜனாதிபதி மேற்கொண்ட ராஜதந்திர மூலோபாயங்களும் ஆக்கபூர்வமான நம்பிக்கையை அவ ருக்கு ஏற்படுத்தவில்லை. குறிப்பாக அமெரிக்காவினதும் அதன் சார்பு நிலையில் உள்ள நோர்வே, ஜப்பான்,இங்கி லாந்து , கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளின் அழுத்தங்களில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள இந்தி யாவை இப்பிரச்சினைகளுக்குள் உள்ளிழுக்கும் உத்தியு டன் கூடிய அரசியல் நகர்வுகளில்கூட ஜனாதிபதி நேற்று முன்தினம் வரை வைத்திருந்த நம்பிக்கையை இழக்கத் தொடங்கியுள்ளார் என்றே தெரிகிறது.

பல்வேறு காரணங்களால் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது கைச்சாத்திடப்படக்கூடுமென பரந்த அளவில் நம்பப்பட்ட இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம்கூட கடைசி நிமிடத்தில் ஒத்திவைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதில் ஜனாதிபதிக்கும் அவரின் சகபாடிகளுக்கும் ஏற்பட்ட ஏமாற்றம் அளவிடக்கூடிய ஒன்றே அல்ல. இந்தியா கிடைத்த வாய்ப்பைப் பயன்டுத்தி ஜனாதிபதியின் பலவீன நிலையை பகடைக்காயாக்கி இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் மூலம் இலங்கையை தன்வசமாக்கி த்னது பிரதான இலக்கான இந்து சமுத்திர பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் தனது இராணுவம் மற்றும் பாதுகாப்பு நிலைகளையும் அரசியல் மேலாதிக்கத்தையும் வலுப்படுத்த முயல்கின்றது என்ற உண்மையை பலாலி விமான நிலையம் மீதான தனது அளவு கடந்த அக்கறையை அபி மானத்தை வெளிப்படுத்தியபோதே ஜனாதிபதியால் புரிந்துகொள்ளமுடிந்தது. ஏற்றுக்கொள்ளவே முடியாத நிபந்தனைகளை இந்தியா நுழைக்க முயன்றமை ஜனாதி பதிக்கு ஏமாற்றத்தை அளித்ததில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை ஒத்திவைக்க வேண்டிய சூழல் அவருக்கு ஏற்பட்டது.

இந்தியாவுக்கு விஜயம் செய்ததன் நோக்கம் சாத்தியமற்றுப்போய் திரும்பிய ஜனாதிபதிக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அவரது கூட்டணிக்குள்ளேயே வேட்பாளராக ஆளுக்கு ஆள்போட்டியிடுவது எரிச்சலை ஊட்டும் விடயமாகியுள்ளது.

இதற்கிடையே மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் குறித்து பேச நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் விசேட சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் வரப்போகின்றனர்.

அவர்களுடள் பேசுவதற்கு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஏற்கனவே வன்னிக்கு வந்து சேர்ந்துவிட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் இடைக்கால நிர்வாக அதிகார சபை திட்டவரைபை வைத்து பேச்சுக்களை ஆரம்பிக்க தனது முழு ஆதரவை மீண்டும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அரசும் ஜனாதிபதியும் என்ன நிலைப்பாட்டை வெளிப்படுத்தப்போகின்றனர் என்பதே அனைவரதும் கேள்வியாகி நிற்கின்றது.

அடுத்துவரும் இருவாரங்களில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஏதாவது கருத்து நிலைப்பாட்டுக்கு அரசு அல்லது ஜனாதிபதி வந்தே தீரவேண்டிய அழுத்தம் அதிகமாகியுள்ளது என்பதில் ஐயமில்லை.

# நாடும் நடப்பும்




# எமது இனத்தின் எதிர்காலத்தை நோக்கி இலங்கை ஆசிரியர் சங்கம் செயற்படுகிறது

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(திருகோணமலை)

'எமது இனத்தின் எதிர்காலத்தை மையமாகக் கொண்டு, தொழிற்சங்கம் என்பதற்கும் மேலாகத் தனது பாரிய சமூக பங்களிப்பை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வழங்கி வருவதையிட்டு, நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்' என்று, நேற்று முன்தினம் மாலை திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நிறைவுபெற்ற 'சர்வதேசக் கல்வியகம், பிரட்ரிக் ஈபேட் மன்றம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து, நடத்திய ஆசிரியர் கருத்தரங்கில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய, வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

'தொழிற் சங்கங்களின் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல்' என்ற தொனிப்பொருளில் கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய இருதினங்கள் திருகோணமலையில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கில் இறுதிநாள் நிகழ்வில் உரையாற்றிய, ஆர்.தியாகலிங்கம் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில்-

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தனித்துவமான இடத்தை வகித்துவருவதை எவரும் மறக்கமுடியாது. ஆசிரியர்களினதும், தமிழ்மொழி மூல மாணவர்களினதும் கற்றல், கற்பித்தல் பிரச்சினைகள் தொடர்பாக முழு அளவில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் செயற்படுகிறது.

ஆசிரியர்களின் தொழில்சார் உரிமைகளுக்காகப் போராடுவது மட்டுமன்றி, ஆசிரியர்களின் வான்மைவிருத்தி தொடர்பாகவும், தமிழர் ஆசிரியர் சங்கம் செயற்படுவது மெச்சத்தக்க ஒரு நிலையாகும்.

ஆசிரியர் சேவை மேன்மைமிக்கது. முத்துக்கள் போன்ற, இரத்தினங்கள் போன்ற சிறு குழந்தைகள் உங்கள் கையில் ஒப்படைக்கப்படுகின்றனர். அத்தகைய குழந்தைகளைச் சிறப்பான முறையில் நீங்கள் உருவாக்கவேண்டும். சிறப்பான குழந்தைகளை உருவாக்க, ஆசிரியர் தன்னைச் சிறப்புற்றவராகக் காட்டிக்கொள்ளவேண்டும்.

ஆசிரியர்கள் தமது கடமை நேரத்துக்கு மட்டும், தமது சேவையை மட்டுப்படுத்துபவர்கள் அல்லர். பல ஆசிரியர்கள் பாடசாலை நிறைவடைந்த பின்பும், மாலை வகுப்புக்களிலும், விசேட வகுப்புக்களிலும் ஏனைய புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் ஈடுபடுவதை நான் பலதடவை நேரடியாகவே அவதானித்துள்ளேன்.

போர்ச் சூழலிலும் பல ஆசிரியர்கள் சிறப்பாகவும், சமூக பங்களிப்புடனும் செயற்பட்டதை நாம் அறிவோம். ஆசிரியர் பற்றாக்குறை எமது மாகாணத்தில் உள்ளதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆசிரியர்களாகிய உங்களுக்கு வழங்கவேண்டிய தொழில்சார் உரிமைகளை, சலுகைகளை எமது அமைச்சின் இயலுமைக்கு உட்பட்டு, பூரணமாக வழங்க நாம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் பலரால், எழுப்பப்பட்ட தொழில்சார் பிரச்சினைகள் சிலவற்றுக்கும் செயலாளர் பதிலளித்தார். (10)

# பனைகளை தறிப்போர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் பனைமரம் தறிப்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது. இவர்கள் பிடிபட்டால், தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

பட்ட பனை, முதிர்ச்சி அடைந்த ஆண் பனை சேதமடைந்த நிலையிலுள்ள பனைகளை மட்டும் தறிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதாகவும், அந்த அனுமதி கிராம அலுவலர் ஊடாக உதவி அரசாங்க அதிபர் அனுமதி பெறப்படவேணடும் என்றும், அனுமதி பெறப்படாமல் பனைகள் தறிக்கப்படும் பட்சத்தில் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இருபது பனைகளுக்கு மேல் தறிப்பதற்கு அரச அதிபரின் அனுமதி பெறப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (51)

# வாய்க்கால்களினுள் தேங்கும் நீரால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம்!

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கூட்டுறவாளர் வீதியின் அருகிலுள்ள வெள்ளை வாய்க்காலில் பற்றைகள் வளர்ந்து மூடியுள்ளது. அத்துடன், அந்த வாய்க்காலில் கழிவுகளும் கொட்டப்படுவதால், கொடி, தண்டுகள், நீர் போன்றன வாய்க்காலினுள் தேங்கி நிற்கின்றது. இதனால் டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் பரவக்கூடிய அபாயம் உள்ளது. உரிய தரப்பினர் இதில் கவனம் செலுத்தி இந்த வாய்க்காலை சீர்செய்ய வேண்டும் என இந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த நீர் பினாக்காய், கந்தரோடை, உடுவில், நவாலி போன்றவற்றின் ஊடாக அராலிக்கடலில் சங்கமிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (72)

# சேதமடைந்துள்ள வடிகால்களால் போக்குவரத்துக்குப் பெரும் அபாயம்

(யாழ்பாணம்)

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதான வீதி, வடிகால்களின் அடையாள விழும்புகள் சேதமடைந்துள்ளதால், அவை எந்த நேரமும் விபத்துக்களை ஏற்படுத்தும் அபாயத்திலுள்ளது.

குறிப்பாக ஐந்து சந்தி, ஆறுகால் மடம் பகுதிகளில் வீதிக்கு அருகாமையில் திரும்பும் முடக்குப் பகுதி, வடிகால் விழும்புகள் சேதமடைந்துள்ளன.

இதனால், பகல் வேளைகளில் விபத்துக்களை தோற்றுவிக்கக் கூடிய அபாய நிலைமை இருப்பது மட்டுமல்லாமல், இரவு வேளைகளில் மிகுந்த ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் சூழலும் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (206)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில வாரங்களாக குடாநாட்டில் பெய்துவரும் கடும் மழையினால் பாாதிக்கப்பட்ட காக்கைதீவு மற்றும் வசந்தபுரம் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இன்று உணவுப் பொருட்கள் மற்றும் நுளம்பு வலைகளை வழங்குகின்றது.

குடாநாட்டில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழைகாரணமாக காக்கைதீவு மற்றும் வசந்தபுரம் குடியேற்றங்களைச் சேர்ந்த மக்கள் வெள்ளம் காரணமாக பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தொண்டர் நிறுவனங்கள் எவையும் இவர்களுக்கு உதவிகளை வழங்க முன்வராத நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இன்று காலை 10-30 மணிக்கு காக்கைதீவுக் குடியேற்றத் திட்டத்தில் 63 குடும்பங்களுக்கும், வசந்தபுரம் கிராமத்திலுள்ள 85 குடும்பங்களுக்கும் உணவுப் பொருட்களும் நுளம்பு வலைகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வழங்கப்படவுள்ளன.

# அனைத்து மனிதர்களாலும் நேசிக்கப்பட்ட மாமனிதர் அமரர் பேராசிரியர் துரைராஜா



வடமராட்சி இமையாணன் கிராமத்தில் 1934 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 10 ஆம் நாள் அழகையா, செல்லம்மா தம்பதியின் சிரேஷ்ட புதல்வனாகப் பிறந்தவர் தான் பேராசிரியர் அ.துரைராஜா. சிறுவயதிலேயே சகலதுறைகளிலும் பிரகாசித்த துரைராஜா கல்வியிலும் மிகச்சிறப்பாகக் கவனம் செலுத்தி வந்தார்.

இவர் தனது இளமைக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும், உயர் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் திறம்படக் கற்று, 1953 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கான தெரிவுப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் எந்திரவியல் பீடத்திற்குத் தெரிவாகித் தனது திறமையைக் காட்டினார். பின்னர் அந்தப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு, முதலாந்தர சிறப்புப் பட்டம் பெற்று அந்த பல்கலைகழகத்தின் குடிசார் எந்திரவியல் துறையின் ஒரு போதனாசிரியராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பின்னர் 1958 ஆம் ஆண்டிலிருந்து சிறிது காலப் பகுதியில் இவர் இலங்கைப் பொது வேலைத்திணைக்களத்தில் தன்னை ஒரு உதவிப் பொறியியலாளராக இணைத்துக் கொண்டார்.

இந்தக் காலகட்டத்தில் இலங்கைப் பல்கலைகழகம் வழங்கிய புலமைப் பரிசிலின் அடிப்படையில் இவரின் பிரத்தியேகத் திறமைகளை இனங்கண்டு கொண்ட கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தின் மண் பொறியியற் துறைப் பேராசிரியர் கே.எச் றொஸ்க்கோ இவரை ஆய்வு மாணவனாகத் தேர்ந்தெடுத்தார்.

இவர் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக, இவரால் வடிவமைக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்ட **Cam clay model** ஒன்று அவருக்குச் சர்வதேசப் புகழை ஈட்டிக் கொடுத்தது மட்டுமன்றி, எதிர் காலத்திய மண் பற்றிய ஆய்வுகளுக்கு ஒரு உந்துவிசையாக அமைந்ததுடன், புவிசார் எந்திரவியல் தொழில் நுட்ப உகரணம் ஒன்றின் வளர்ச்சிப்படிகல்லாகவும் கருதப்படுகிறது.

இதன் பின்னர் 1962ஆம் ஆண்டில் இலங்கைப்பல்கலைக் கழகத்தின் குடிசார் எந்திரவியற் துறை விரிவுரையாளராகத் தன்னை இணைத்துக் கொண்டார். அந்தக் காலகட்டத்தில் கொழும்பில் இயங்கி வந்த இந்தப் பல்கலைக் கழகத்தின் எந்திரவியற் பீடம் பேராதனைக்கு இடம் மாற்றப்பட் டது. தனது ஆராய்சசித் திறமை யில் இந்தப் பல்கலைக்கழகத் தில் ஒரு தரமான ஆய்வு கூடத் ததை நிறுவி, அதனை நிர்வகிப் பதில் பெரும்பங்கு வகித்தார். இலங்கை மண்ணின் பொறியியல் பண்புகளை ஆராய்வதற்கும் அந்த ஆய்வுகூடம் பெரிதும் பயன பட்டது.

1967ஆம் ஆண்டில் பேராசிரியர் துரைராஜா, தனது வாழ்க்கைத் துணைவியாக இராஜேஸ்வரியை திருமணஞ் செய்து இல்லற வாழ்வில் காலடி வைத்தார். பேராசிரியரின் ஐந்து பிள்ளைகளும் அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வளர்ந்து வருகின்றார்கள்.

திருமணத்தின் பின் ஒரு வருடகாலம் கனடாவிலுள்ள "வோட்டலூ" பலகலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றிய பின் 1971 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் குடிசார் எந்திரவியல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழக எந்திரவியல் பீடாதிபதியாக 1975, 1982ஆம் ஆண்டு ஆகிய காலகட்டங்களில் பொறுப்பேற்றுக் கொண்டார். 1985ஆம் ஆண்டில் இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் குடிசார் எந்திரவியல் பேராசிரியராகப் பொறுப்பேற்றுப் பின், 1987ஆம் ஆண்டில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட எந்திரவியல் பீடாதிபதியாகவும் நியமிக்கப்பட்டார்.

1985ஆம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவி பேராசிரியர் துரைராஜாவிடம் ஒப்படைக்கப் பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் பேராசிரியர் யாழ். பல்கலைக் கழகத்தில் எந்திரவியல் .பீடமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற நிபந்தனை ஒன்றை முன் வைத்தார். அதற்கு அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு அதற்கென ஒரு பேராசிரியரை நியமித்தது.

நாட்டில் ஏற்பட்ட குழப்ப சூழ்நிலைகளால் மற்றைய பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டிருந்த போது, யாழ். பல்கலைக்கழகம் மிகச் சிறப்பாக இயங்கியதென்றால், அது பேராசிரியர் துரைராஜா எவ் வளவு மிகச் சிறந்த நிர்வாகத் திறமைமிக்கவர் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது அல்லவா?

1990ஆம் ஆண்டில் வடபகுதியில் யுத்த சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட பொருளாதார தடையால் வாகனப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருந்த வேளையில் பேராசிரியர் தனக்கென பிரத்தியேக வசதிகள் எதுவும் கோராமல், மக்களோடு மக்களாக தினமும் 32 மைல்கள் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து, பல்கலைக் கழக நிர்வாகத்தை இயக்கிவந்தார்.

உபவேந்தர் 58 வயதில் 32 மைல்கள் பயணம் செய்வ தென்றால், அவர் கடமை யில் எவ்வளவு தூரம் கண்ணும் கருத் துமாக இருந்திருக்கிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது அல்லவா?

வருடந்தோறும் யாழ்.பல்கலைக்கழகத்தில் பயிலும் 200 வறிய மாணவர்கள் பயன் பெறும் வகையில் துணைவேந்தர் -துணை நிதியம் ஒன்றை ஆரம்பித்து வைத்தார். காலம் சென்ற முன்னாள் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.வித்தியானந்தனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட விவசாயபீடம் அமைக்கும் வேலையை பேராசிரியர் துரைராஜா, வேலையைப் பூர்த்தி செய்துவைத்தார். இத்துடன் மட்டும் நின்று விடாது, மாங்குளத்தில் அரசால் வழங்கப்பட்ட உறுதி மொழியின் அடிப்படையில் எந்திரவியற் பீடத்தையும், முல்லைத்தீவில் மீன்பிடித் துறையியல் பீடத்தையும் நிறுவுவதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளையும் பூர்த்தி செய்து வைத்தார்.

இதுமட்டுமன்றி யாழ். பல்கலைகழகத்தில் சைவசித்தாந்தத்துறையை உருவாக்கி, அதை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தனது அயராத முயற்சியால் திரட்டிக் கொடுத்தார்.

இவர் பல பொறியியல் நிறுவனங்களில் பல முக்கிய பதவிகளை வகித்தார். குறிப்பாக இலங்கை எந்திரிமார் சங்கத்தின் தலைவராகவும், தொழில்சார் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவராகவும் பணியாற்றியுள்ளார். இலங்கைப் புவிசார் தொழிநுட்ப சங்கத்தின் ஸ்தாபனத் தலைவர் இவரேயாவார். 1992 ஆம் ஆண்டு யாழ். விஞ்ஞான சங்கத்தை ஆரம்பித்து, அதன் ஸ்தாபகராகவும் இருந்துள்ளார்.

வடபகுதியை அபிவிருத்தி செயவதற்காக 'ஊற்று' நிறுவனத்தை உருவாக்கி, அதன் தலைவராகச் செயற்பட்டு வந்தார். இவர் துணைவேந்தர் பதவியிலிருந்து விலகும் வரை தாம் கொடிய நோயால் பீடிக்கப்பட்டிருப்பதை அறிந்தும், இறுதிவரை மனந்தளராது தன் உடல் நலத்தையும் பொருட்டாக எண்ணா மல் கடமையிலேயே கண்ணாக இருந்தார்.

1994 ஆம் ஆண்டு துணைவேந்தர் பதவியிலிருந்து விலகி, திறந்த பல்கலைக்கழகத்தின் குடிசார் எந்திரவியல் பேராசிரியராக பொறுப்பேற்றுக் கொண்டார். அங்கு அமரராகினார். பேராசிரியர் துரைராஜாவின் மறைவால் நாம் சிறந்த ஒரு பொறியியல் மேதையையும், விஞ்ஞானியை யும், ஆராய்ச்சியாளரையும் நிர்வாகியையும், பேராசிரியர் மட்டுமல்லாமல் மனிதநேயமிக்க சீரிய பண்பாளனையும் இழந்துவிட்டோம். அன்னார் பல்கலைக்கழக வட்டாரங்களில் மட்டுமல்லாமல், அனைத்து மக்களாலும் நேசிக்கப்பட்ட மாமனிதர்.

அன்னார் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, இந்த நாட்டுக்கே பெருமை சேர்த்த மகாமேதை, அன்னாரின் தொழில்சார் திறமையும், ஆய்வுச் சாதனைகளையும், கௌரவிக்கும், வகையில் அவரது மரணத்தின் பின் இலங்கைத் திறந்த பல்கலைக் கழகமும், யாழ்.பல்கலைக்கழகமும் விஞ்ஞான கலாநிதிப்பட்டத்தையும் (Do ctor of Science) பேராதனைப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதுப்பட்டத்தையும் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

---

# மீண்டும் சேவையில் ஈடுபடும் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை



போரினால் அழிவுற்ற மருதங்கேணிக் கிராமிய வைத்தியசாலைக் கட்டடம்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்கள் கடநத அரைநுாற்றாண்டுக்கு மேலாக வைத்திய சேவைகள் வைத்திய உதவிகளைப் பெறுவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

சுமார் 52 கிலோ மீற்றர் நீளமான பிரதேசத்தின் மையப் பகுதியில் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை அமைந்துள் ளது. இதன் மேற்கே 13 கிலோ மீற்றர் தூரத்தில்அம்மன் கிராமத் தில் பிரசவ விடுதியுடன் கூடிய மத்திய மருந்தகதும் கிழக்கே 13 கிலோமீற்றர் தூரத்தில் முளளியான் மத்திய மருந்தகமும் அமைந்திருந்து இந்தப் பிரதேச மக்களுக்கு வைத்திய உதவிகளை வழங்கி வந்தன. குடாரப்பு தொடக்கம் மணற்காடு கிராமம் வரையான மக்கள், அம்பன் மத்திய மருந்தகம், பிரசவ விடுதி யில் சிகிச்சை பெற்றுவந்ததுடன் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டிய நிலையிலிருந்தனர். ஆழிய வளை - தொடக்கம் சுண்டிக் குளம் வரையுமுள்.ள மக்களும் பருவகாலத்தில் மாசி தொடக்கம் கரவலைத் தொழிலில் ஈடுபடும் சுமார் 1500 வரையான கடற்றொழிலாளர்களும் முன்ளியான் மத்திய மருந்தகத்திலும் மேலதிக சிகிச்சைகளை சாவ கச்சேரி யாழ்பபாணம் வைத்திய சாலைகளிலும் பெற்றனர். இதனால் மக்களுக்கு அதிகளவு பொருட்செலவும் வீண் சிரமங்களும் ஏற்பட்டன.

1952 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கட்டப்பட்ட முள்ளியான மத்திய மருந்தகம், வைத்தியர் தங்கும் விடுதி என் பன 1991 ஆம் ஆண்டு இடம் பெற்ற விமா னக் குண்டு வீச்சில் சேதமாக்கப் பட்டது. இத்துடன் கட் டைக்காடு - வெற்றிலைக்கேணி இராணுவ தரையிறக்கம் கார ணமாக இந்தப் பிரதேச மக்கள் முற்றாக இடம் பெயர்ந்தனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் 14 வருடங்களுக்குப் பிறகு மீளக் குடியமர்ந்த மக்கள் போக் வரத்து வசதிகள் இல்லாத நிலையில் கால் நடையாக வந்தே ஆளியவளை தியாகதீபம் தீலி பன் மருத்துவமனையிலும் 2003 ஆம் ஆண்டுக்குப் பிற்பகுதியிலி ருந்து மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை மருந்தகத்தி லும் சிகிச்சை பெற்றனர். மேல திக சிகிச்சைக்காக ரூபா 3000 வரை செலவு செய்து கிளிநொச்சி யாழ்ப்பாணம் வைத்தியசாலை களில் சிகிச்சை பெறறணர.

2000 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் பின் அம்பன் பிரதேசம் இராணுவ உயர் பாது காப்பு வலையமாக பிரகடனப் படுத்தப்பட்டதால் அம்பன் மருந் தகமும், பிரசவ விடுதியும் முற்றாக பூட்டப்பட்டதுடன் அந்தக் கிராம மக்களும் இடம் பெயர்ந்தனர். அம்பன், குடத்தனை, பொற்பதி, மணற்காடு கிராம மக்கள் வெகு சிரமத்தின் மத்தியில் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலைக் குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர். அம்பன் மத்திய மருந்தகம், பிரசவ விடுதி என்பன வற்றைத் திருத்தி மீள இயங்க வைக்க எடுத்த முயற்சிகள் எதுவும் கைகூடவில்லை.

1935 ஆம் ஆண்டு மத்திய மருந்தகமாக ஆரம்பித்து இந்தப் பிரதேச மக்களுக்கு வைத்தி சேவையாற்றி வந்த செம்பியன் பற்று மருந்தகம், 1950 ஆம் ஆண்டு செம்பியன்பற்று கிராம வைததியசாலையாகத் தரமுயரத் தப்பட்டு பின்னர் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வந்தது. இந்த நாட்க ளில் ஆண் நோயாளர்கள தங்கி சிகிச்சை பெறும் விடுதியுடன் இணைந்த வெளிநோயாளர் பிரிவு பெண் பெண் நோயாளர் தங்கி சிகிச்சை பெறும் விடுதியுடன் இணைந்த பிரசவ விடுதி என் பனவற்றுடன் இயங்கிய கிராம வைத்தியசாலை இந்தப் பிர தேசத்திலுள்ள 2541 குடும்பங் களைச் சேர்ந்த 11395 பேருக்கு வைத்திய சேவையாற்றி வந்தது.

இந்த வைத்தியசாலையில் இரண்டு வைத்திய அதிகாரிகள் கடமையாற்றி வந்துள்ளதுடன் இதற்கான தனியான அறை அமைக்கப்பட்டதுடன் பற்சிகிச்சைக்கான தளபாடங்கள் திணைக் களத்தால் வழங்கப்பட்டிருந்தன. வாரம் ஒருமுறை ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வருகை தரும் பல வைத்தியரால் பற் சிகிச்சை நடாத்தப்பட்டுவந்தது.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது வைத்தியசாலைக் கட்டடங்கள், வைத்திய அதிகாரி தங்கும் விடுதி என்பன முற்றாகச் சேத மடைந்து. இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத் தின்பின் மீளக்குடியர்ந்த பின் ஆழியவளை தியாக தீபம் திலீபன மருத்துவமனை, மருதங்கேணி மருந்தகத்திலும் வைத்திய உத விகள் பெற்று வந்ததுடன் மேல திக சிகிச்சைக்காக கிளிநொச்சி, பருத்தித்துறை யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலையிலிருந்தனர். இந்தப் பிரதேச மக்களின் வைத்திய சேவை, வைத்திய உதவிகளைக் கருத்தில் கொண்டு இரு நூற்று அறுபதினாயிரம் ரூபா செலவில் சகல வசதிகளுடன் கூடிய 9 கட்டடங்கள் நிகொட் நிதி உதவியுடன் அமைகக் பட்டுள்ளன. வெளிநோயாளர் பிரிவு, ஆண், பெண் நோயாளர் தங்கி சிகிச்சை பெறும் இரண்டு விடுதிகள், பிரசவ அறையும் விடுதியும், வைத்திய அதிகாரி தங்கும் விடுதி, மருத்துவமாது தங்கும் விடுதி, சமையல் அறைப் பகுதி, பிரேத அறை நோயாளர் காவு வண்டி தரிப்பிடம் என்பன அடங்கும் இத்துடன் 23 இலட்சம் ரூபா செலவில் நோயாளர் காவு வண்டியும் பன்னிரண்டு இலட்சம் ரூபா செலவில் மின்பிறப்பாக்கி ஒன்றும் இந்த வைத்தியசாலைக்கு நிகொட் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள் ளன.

இந்தப் பிரதேசத்தில் தற் போது குடாரப்பு தொடக்கம் சுண்டிக்குளம் வரை 3307 குடும் பங்களைச் சேர்ந்த 13070 மக்கள மீளக்குடியமர்ந்துள்ளனர். இவர் கள் தவிர பருவகாலத்தில் கரை வலைத் தொழிலுக்காக இங்கு வரும் கடற்தொழிலாளர்கள் எண் ணிக்கை சுமார் 1500 வரையா கும். சுமார் 15000 வரையான மக்களுக்கு தனியொரு வைத் தியசாலையால் நோய்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்படலாம். இவைகளைக் கருத் திற்கொணடு இந்தவைத்திய சாலைக்கு மேலும் வசதிகள் செய்து கொடுக்கவேண்டியது அவசியமாகும்.

# பலூஜா நகர் மீது தாக்குதலில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினர் மீது கடும் தாக்குதல்



ஈராக் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பலூஜா நகரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முகமாக நேற்றுமுன்தினம் பாரிய தாக்குதலை ஆரம்பித்த அமெரிக்கப் படையினர் - ஈராக் தீவிரவாதிகளின் பலத்த எதிர்ப்புக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக பலூஜா நகரின் ஜோலான் பிரதேசத்தில் அமெரிக்கப் படையினர் தீவிரவாதிகளின் பலத்த எதிர்ப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் தீவிரவாதிகள் ரொக்கற் மற்றும் மோட்டார் குண்டுகளால் அமெரிக்கப் படையினர் மீது தாக்குதலை நடத்திவருவதாகவும் அமெரிக்கப் படையினர் முன்னேற்றத்துக்கு கடும் பிரயத்தனம் மேற்கொண்டபோதும் அவர்களால் முன்னேற முடியவில்லை எனவும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

பலூஜா நகரில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் அமெரிக்கப் படையினரை எதிர்த்துப் போரிடுவதாக அமெரிக்கப்படை அதிகாரியான ஜென் ஜோர்ஜ் கேசி தெரிவித்தார்.

பலூஜா நகரின் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் கைப்பற்றுவதற்கு அமெரிக்கப் படையினர் பலத்த எதிர்ப்பினை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலூஜா நகரில் ஒவ்வொரு நிமிடமும் நூற்றுக்கும் மேற்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடிப்பதாகவும் நகர் முழுவதும் புகைமூட்டம் காணப்படுவதாகவும் அங்குள்ள பி.பி.சி. செய்தியாளர் தெரிவித்தார்.

பலூஜா நகரிலிருந்து இரண்டரை லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறியுள்ளபோதும் சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் இன்னும் அங்கு தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஈராக் தீவிரவாதிகளால் அமெரிக்கப் படையினருக்குச் சொந்தமான ஹெலி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளபோதும், அமெரிக்கப் படைத்தரப் பினர் இந்தச் செய்தியை மறுத்துள்ளனர்.


# யாழ். மாவட்டத்தில் / கிளிநொச்சி மாவட்டத்தில்

சாவதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் -
யாழ் மாவட்ட வலயக் கல்விபணிமனைகளின்

தமிழ் மாணவர் ஒன்றியம் -
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை

இணைந்த ஆதரவுடன்

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## நடாத்தும்

க.பொ.த (சா/த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை ( பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்)

யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் **இலவசமாக** நடாத்தவுள்ளது.

### யாழ். மாவட்டத்திற்கான கருத்தரங்கு நிலையங்கள்

காலம்:- 10.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வலிகாமம் வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :

01. யா/இராமநாதன் கல்லூரி.
02. யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
03. யா/உடுவில் மகளிர் கல்லூரி.
04. யா/அருணோதயாக் கல்லூரி.
05. யா/யூனியன் கல்லூரி.
06. யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.
07. யா/வீக்றோரியாக் கல்லூரி.
08. யா/வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
09. யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.
10. யா/மானிப்பாய் மெமோறியல்.
11. யா/இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி.
12. யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.
13. யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

காலம்:- 10.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தீவக வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:

01. யா/சரஸ்வதி வித்தியாலயம்.
02. யா/சேர்வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்.
03. யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்.
04. யா/ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ்.
05. யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
06. யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

**பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்**

### யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளார் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

கொமர்ஷல் வங்கி உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SICS கணினி சேவைகள் இல.125A ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்

CIT Global Info IDM (PVT) LTD. IDM

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831

S.T.P 73, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302, கே.கே.எஸ் வீத', யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road, Jaffna

Softview Computer College 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna

### கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
13.11.2004 (ஆங்கிலம்)

| | | |
|---|---|---|
| 01. | பூநகரி | - பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | முழங்காவில் | - முழங்காவில் மகாவித்தியாலயம் |
| 03. | ஜெயபுரம | - ஜெயபுரம் அ.த.க. பாடசாலை |
| 04. | பளை | - பளை மத்திய கல்லூரி |
| 05. | தருமபுரம் | - தருமபுரம் மகா வித்தியாலயம் |
| 06. | முரசுமோட்டை | - முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 07. | வட்டக்கச்சி | - வட்டக்கச்சி மகாவித்தியாலயம் |
| 08. | இராமநாதபுரம் | - இராமநாதபுரம் மகா வித்தியாலயம் |
| 09. | அக்கராயன | - அக்கராயன் மகா வித்தியாலயம் |
| 10. | இரணைமடு | - கனகாம்ப அ.த.க.பாடசாலை |
| 12. | கனகபுரம் | - கனகபுரம் மகா வித்தியாலயம் |
| 12. | உருத்திரபுரம் | - கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| 13. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மகா வித்தியாலயம் |
| 14. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மத்திய கல்லூரி |
| 15. | விசுவமடு | -பிரமந்தனாறு மகா வித்தியாலயம் |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொலிஸ், நீதித்துறைகளில் அதிகளவில் ஊழல்களாம்!

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸ் மற்றும் நீதித்துறைகளில் ஊழல் மோசடிகள் அதிகரித்துள்ளமையால் நாட்டை முன்னேற்றிச் செல்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற குற்றங்களைத் தடுப்பதற்கான தேசிய ஆலோசனைச் சபையின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி - சட்டத்தையும், சமாதானத்தையும் பாதுகாப்பதாகக் கூறப்படும் இந்த இரு துறைகளும் நாட்டில் அதிகளவு ஊழல்களைப் புரியும் துறைகளாகும். இதனை நான் தெரிவிக்காவிட்டால் வேறு யாராலும் வெளிப்படுத்த முடியாது.


என்னை எவ்வாறு தூசித்தாலும் பரவாயில்லை. இந்த நாட்டினை அபிவிருத்தி செய்வதற்காக நான் தெரிவிக்கும் கருத்து என்பதால் இது பற்றிய விமர்சனங்களை நான் பொருட்படுத்தவில்லை.

தற்பொழுது பொலிஸார் குற்றங்களைத் தடுப்பது குறைந்து வருகின்றது. பொலிஸாருக்குப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது பெரும் பிரச்சினையாகி வருகின்றது.

அடுத்த விடயம் இந்தப் பிரச்சினைகளுக்கு நீதிமன்றங்கள் உரிய தண்டனை வழங்குவதில்லை. இதுவும் குற்றங்கள் அதிகரிப்பதற்கான காரணங்களாகும்.

இங்குள்ள சட்டத்துறை மோசடிகள், ஊழல்கள் நிறைந்த துறைகளாகக் காணப்படுகின்றது. இதை மறைப்பதில் எந்தப் பயனும் இல்லை.

அரசியல்வாதிகளின் பின்னால் வால்பிடித்துக்கொண்டு பதவி உயர்வுகளை மட்டும் நோக்கமாகக் கொணடு செயற்படுபவர்கள் நாட்டில் சட்டத்தையும், அமைதியையும் நிலை நாட்ட முடியாது என்றார்.



ஹெலியிலிருந்து இறங்குகிறார் அன்ரன் பாலசிங்கம்!



பாலசிங்கத்தை வரவேற்கக் காத்திருக்கும் தளபதிகள் - பொறுப்பாளர்கள்.



பாலசிங்கம் தம்பதியினருடன் கலந்துரையாடும் பொறுப்பாளர்கள் – தளபதிகள்!

## லஞ்ச குற்றச்சாட்டில் கைதான எஸ்.பி. பிணையில் விடுவிப்பு!

(கொழும்பு)

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அமைச்சர் பதவி வகித்த காலத்தில் சட்டவிரோதமான முறையில் சொத்துக்களைச் சேர்த்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இரண்டு கோடி 90 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குரிய விபரங்களை இவர் சமர்ப்பிக்கத் தவறியதாகவும் கூறப்படுகிறது.

மேல் நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவிருப்பதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்று அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி ரூபா 25 லட்சம் ரொக்கம் மற்றும் ஒரு கோடி ரூபா சரீரப் பிணையில் சந்தேகநபரை செல்ல அனுமதித்து, மீண்டும் ஜனவரி 27ஆம் திகதி ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டார். *(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)*

## கூட்டமைப்பு - முஸ்லிம்....

போர்நிறுத்தஉடன்படிக்கையை முறையாக கடைப்பிடிப்பதற்கு இரு தரப்பினருக்கும் அழுத்தம் கொடுகக வேண்டுமென நோர்வே பிரதிநிதி தங்களிடம் கோரியதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுடனான சந்திப்பு அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம்களுக்கு சமாதானப் பேச்சுக்களின் போது தனித்தரப்பு அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு மாறினாலும் தமது இக் கோரிக்கைக்கு பாதிப்பு இல்லை என்பதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துக் கூறியுள்ளது. கடந்தகால யுத்தத்தினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளின் ஆவண அறிக்கையொன்றும் நோர்வே பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

இதனிடையே நோர்வே பிரதிநிதிகள் அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவையும் நேற்று சந்தித்து உரையாடியுள்ளதாகவும் தெரியவருகிறது.

## பரந்தன் விபத்தில் பெண் ஒருவர் பலி!

(கிளிநொச்சி)

பரந்தன், முரசுமோட்டைப் பகுதியில் நேற்று கன்ரர் வாகனம் மோதியதில் குடும்பப் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் முரசுமோட்டை முதலாம் கட்டையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான எஸ். சிவானந்தினி என்பவரே உயிரிழந்தவராவார்.

### கிளிநொச்சிக்கு...

தளபதி கேணல் ரமேஸ், மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுஷா, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா உள்ளிட்ட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் ஆகியோர் வரவேற்றனர்.

இதையடுத்து கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து சமாதான முயற்சிகள், சமகால விவகாரங்கள் மற்றும் நாளை நடைபெறவுள்ள ஜான் பீற்றர்சனுடனான சந்திப்பு மேற்படி விடயங்கள் குறித்து முக்கிய ஆலோசனைகளில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது.

### மின்சாரம்....

லம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி....

ராக தெரிவு செய்யப்படுவாரெனவும் அந்த தகவல் மேலும் தெரிவித்தது.

### சைக்கிளில்....

கொண்ட இருவரும் தப்பிச்சென்றுவிட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.


## பணிநிலை வேண்டுகை

1) ஒவ்செற் அச்சு இயந்திர இயக்குநர்

KORD - SOLONA ஒவ்செற் அச்சு இயந்திரங்களை இயக்கக்கூடிய அனுபவஸ்தர்கள் தேவை.
அனுபவ தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும

2) இயந்திர உதவியாளர்கள் - பயிலுனர்கள்

மேற்படி அச்சு இயந்திரங்களில உதவியாளர்களாகவும பழகுநராகவும பணியாற்ற ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை.
உரிய சான்றிதழ்களுடன நேரில் வரவும்.

3) சிற்றூழியர்கள்

அலுவலகத்தில் சிற்றூழியராக பணியாற்ற நல்லொழுக்கமுடையவர்கள் தேவைப்படுகின்றனர்.
ஆர்வமுடையோர் நேரில் வரவும்

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் (12.11.2004) காலை 10.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

ஆளணி முகாமையாளர்
நமது ஈழநாடு
267 நாவலர் வீதி யாழ்ப்பாணம.

UNIT

இப்பாரம்பரிய தீபத்திருநாளில் எங்கள் வியப்பூட்டும் சேவையையும் அதன் பலாபலன்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்குடனும் ஏற்கனவே வழங்கப்பட்ட சலுகைகளை பெறமுடியாததையிட்டு கவலைப்படுபவர்களை மகிழ்விக்கும் நோக்குடனும் உலகத்தரம் பெற்ற எங்கள் நிறுவனம் அதன் இந்திய மற்றும் பல்நாட்டு தொழில்நுட்பவியலாளர்கள் வாயிலாக சகல கணனி உதிரிப்பாகங்களையும் நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்யேரிய சேவையுடன் 3 வருட முழு உத்தரவாதம் வழங்குகின்றோம்.

New P4 Just for 45000/=
With Monitor

கொழும்பு விலையில்

நாங்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவர்கள் என்கிறோம். எவ்வாறு?

- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களுடன் இணைத்தயாரிப்பில் ஈடுபட்டவர்கள்
- குறித்த நேரத்தில் எடுத்த வேலைகளை செய்து முடிப்பவர்கள்
- உலகளவில் தகவல் தொழில்நுட்பத்துறையில் குறிப்பிடக்கூடிய அளவில் பங்காற்றல் கொண்டவர்கள்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குபவர்கள்

Attractive Deepavali Offer

Imported High Quality
Shirt or Trouser or Ladies/Gents T Shirt

Hybrid Boost, Hypher Thread, Dual Monitor

விசேட சலுகைப் பொதிகள்

- புதிய Multimedia Pentium IV கணனிகள் Monitor உடன் Rs. 45,000/= முதல் மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- இறக்குமதி செய்யப்பட்ட Multimedia Pentium III கணனிகள் Monitor உடன் Rs. 26,000/= முதல் ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- இறக்குமதி செய்யப்பட்ட Multimedia Compaq Pentium II கணனிகள் Monitor உடன் Rs. 16,000/= முதல் ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

இவையெல்லாம் இலவச வீட்டில் சேர்த்தல் மற்றும் வீட்டிலேயே பராமரிப்புடன் கூடியவை

We are entirely different from others

நிபந்தனைக்குட்பட்டது.

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.